Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 08 புதன்கிழமை (20.02.2013) பக்கங்கள் 20 ஓசை - 143



















# இன நல்லிணக்கத்தை உருவாக்க ஐ.நா.பிரதிநிதியை நியமியுங்கள்

## மனித உரிமைகள் பேரவையிடம் மன்னார் ஆயர் கோரிக்கை



யுத்தத்தின்போது, எல்லா தரப்பினராலும் இழைக்கப்பட்ட அனைத்துலக சட்டமீறல்கள் குறித்து விசாரிக்க சுதந்திரமான அனைத்துலக விசாரணைக் குழுவை உருவாக்கும் வகையிலும், கடந்த கால, மற்றும் தற்போதைய மனித உரிமை மீறல்களுக்கு பரந்தளவிலான பதிலளிக்கும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சிகளுக்கு அரசுக்கு உதவும் வகையிலும், ஆலோசனை வழங்குவதற்கென ஐ.நா. சபையின் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையிலான கத்தோலிக்க மதகுருமார் குழு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் ஆயர் உட்பட மத குருமார்களும் அருட் சகோதரிகளுமாக 133 பேர் கையெழுத்திட்டு கடிதம் மூலமாக இந்தக் கோரிக்கையை அவர்கள் முன் வைத்திருக்கின்றார்கள்.

ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட மிகவும் மென்போக்கான பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்த பரிந்துரைகளைக் கூட நிறைவேற்றுவதற்குரிய அரசியல் ஆர்வமின்மையையே நாங்கள் அரசாங்கத் தரப்பில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மீள்கட்டுமானம் திருப்திகரமாக உள்ளது


### யாழ்.வந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகள் மீள் கட்டுமானங்கள் குறித்து தமது விஜயத்தின் போது அவதானிக்க முடிந்ததாகவும், இதனையிட்டு தாம் திருப்தியடைவதாக நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் பாலி ஓ மாவகே யாழ். அரச அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் அறிவதற்காக நேற்று முற்பகல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்

(19) ஆம் பக்கம் பார்க்க



## கச்சதீவுக்கு விசேட படகுச்சேவை

(நெடுந்தீவு)

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு குறிகாட்டுவானில் இருந்து எதிர்வரும் சனிக்கிழமை முதல் விசேட படகுச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரு நாட்கள் நடைபெறவிருக்கும் இச்சேவை குறித்த நேர அட்டவணை வெளியிடப்பட்டிருக்கிறது.

சனிக்கிழமை குமுதினிப் படகுச்சேவை நெடுந்தீவிலிருந்து காலை 6.30 மணியளவில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வாகனம் மோதி இளைஞர் ஸ்தலத்தில் பலி

### பூநகரியில் விபரீதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-பூநகரி இராணுவத்தினரது தண்ணீர் பவுஷர் மோதியதால் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் தம்பையா இந்திரலிங்கம் (வயது-32) என்பவர் அந்த இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

குணரத்தினம் குணசீலன் (வயது-49) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவதினம் பரந்தன் - பூநகரி வீதியில் உள்ள வயல் பரப்பில் அறுவடை வேலையை முடித்துவிட்டு வீதியோரத்தில் நெல் மூடைகளை இவர்கள் அடுக்கி வைத்திருந்தனர். நள்ளிரவு நேரமாகையால் இவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் எல்லை நிர்ணயம்; வட்டாரங்கள் மறுசீரமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் உள்ளூராட்சி எல்லைகளைப் பிரிக்கும் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது. புதிதாக திருத்தம் செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறையின் கீழ் வட்டார அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வது பற்றிய விளக்கத்தை வட மாகாண பிரதித்தேர்தல் ஆணையாளர் என்.அச்சுதன் அளித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தோனேஷியக் கடற்பரப்பில் இலங்கை அகதிகள் 26 பேர் கைது

இந்தோனேஷிய டியூங் தீவிற்கு அருகில் வைத்து இலங்கையைச் சேர்ந்த சட்ட விரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பயணித்த படகு சேதமடைந்த காரணத்தினால் கடற்பரப்பில் 12 நாட்களாகத் தத்தளித்துக் கொண்டிருந்துள்ளனர்.

இந்நிலையிலேயே இந்தோனேஷியப் பொலிஸார் இவர்களை காப்பாற்றியுள்ளனர். புகலிடக் கோரிக்கையாளர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளான நிலையில் அப்படகோட்டி மற்றும் பணியாளர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இவ் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் 26 பேரில் 17 ஆண்கள், 4 பெண்கள், 3 ஆண் குழந்தைகள் மற்றும் 2 பெண குழந்தைகளும் இருந்துள்ளனர். இவர்கள் தற்போது டியூங் தீவில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டது எப்படி?

### விபரணப் படம் விரைவில்

(லண்டன்)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் கொலை செய்யப்பட்டது எப்படி என்ற விபரத்தை சில ஆவணப் படங்கள் மூலம் சனல்-4 தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் வெளியிட்டிருப்பதாக பி.பி.சி. தனது செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை போரின் இறுதிக் கட்டத்தின் போது பிரபாகரனின் இளைய மகனான பாலச்சந்திரன் படையினரால் பிடித்து வைக்கப்பட்டு, சுட்டுக் கொலலப்பட்டிருக்கிறார் என்பதற்கு தமக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன்றைய 5ஆம் பக்கத்தில்...

### விடுதலைப்புலிகளை அழித்த ஊடகங்கள் 24




## பாக்.கடற்படை அதிகாரிகள் கொழும்பு விரைவு

### வலுவடையும் உறவு

ஆறு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் கடற்படையின் தூதுக்குழுவொன்று நேற்றுக் கொழும்பை வந்தடைந்துள்ளது. நான்கு பேர் கொண்ட இந்த தூதுக்குழுவிற்கு கட்டளைத் தளபதி மெஹ்பூப் இலாஹி தலைமை தாங்குகின்றார். இரு நாடுக ளும் பயங்கரவாத எதிர்ப்புப் போரில் தமக்குள்ள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற படை அதிகாரிகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

# காரைநகர் பாடசாலைகளில் பொது மண்டபங்கள் திறப்பு



(காரைநகர்)

யாழ். காரைநகர் தியாகராசா மத்திய மகாவித்தியாலயம், யாழ்ற்றன் கல்லூரி ஆகியவற்றிற்கான பொதுமண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மாகாணங்களிற்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமையப் பெற்ற ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான பொது மண்டபங்களினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் திறந்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

பாடசாலைகள் நல்ல பெறுபேறுகளை வெளிக்காட்டும் போதே அப் பாடசாலைக்களுக்கான அதிகரித்த அபிவிருத்திச் செயற்பாடுக்ளும் முன்னெடுக்கப் படுகின்றது. இப்பாடசாலை கல்விச் செயற்பாட்டில் அதிகரித்த நல்ல பெறுபேறுகளை வெளிகாட்டும் போது தன்னால் இயன்ற உதவிகளை செய்து தருவதாகவும், பாடசாலைகளின் தேவைகளை அதிபர் ஆசிரியர்கள் மூலம் தெரிந்து கொண்டதாகவும் அந்த தேவைகள் எதிர்காலத்தில் படிப்படியாகத் தீர்க்கப் படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் ஆ.தியாகராஜா மகாவித்தியாலய அதிபர் திருமதி வாசுகி தவபாலன், யாழ்ற்ரன் கல்லூரியின் அதிபர் வே.முருகமூர்த்தி கல்வியமைச்சின் பிரதிச்செயலாளர் விக்னேஸ்வரன், தீவகவலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின் டேஸ், காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், முன்னாள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஸ்ணன், காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச இணைப்பாளருமான ரஜனி, ஓய்வுபெற்ற அதிபர் வேலாயுதம் பிள்ளை, பழையமாணவர் சங்க நிர்வாகத்தினர், பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கணனி, தையல், ஆங்கிலக் கல்வியை இளைஞர் யுவதிகளுக்கு வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரினின் ஏற்பாட்டில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாகக் கிராமங்களின் வறுமை நிலையில் உள்ள பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய இளைஞர், யுவதிகளுக்கும் க.பொ.த. சாதாரண தரம் கற்ற பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும் வழங்க சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் முன் வந்துள்ளனர். (11)

# 106ஐ தாண்டியது டெங்கு நோயாளர்கள்




(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து நேற்று தலா ஒவ்வொருவர் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினமும் இவ்வாறு இருவர் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். அத்துடன் இந்த வருடம் நேற்றுவரை டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 106 ஆக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(பா)

# வட்டக்கச்சியில் திருட்டு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சந்தைப்பகுதிக்கு அருகிலுள்ள யது ரெக்ஸ் ரைல் புடைவைக் கடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இலட்சக் கணக்கான பணம், நகை, புடைவைகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இக்கடை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 3 இலட்சம் ரூபா பணம், பத்தரைப் பவுண் நகை, 12 இலட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் என்பனவற்றை களவாடியதாகத் தெரிவிக் கப்படுகிறது.

சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸாருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (42)

# நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல் அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் சில முக்கிய சந்தைகளில் முத்திரையிடப் படாத நிறுத்தல் அளவைகள் வியாபாரிகளால் பயன்படுத்தப் படுவது யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பிரிவினரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலமாகக் கண்டறியப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

மருதனார்மடம், சுன்னாகம், மானிப்பாய், இணுவில், சங்கானை ஆகிய சந்தைகளிலேயே வியாபாரிகளினால் முத்திரையிடப்படாத நிறுத்தல் அளத்தல் அளவைகள் பயன்படுத்தப்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே இத்தகைய நிறுத்தல் அளத்தல் அளவைகளைப் பயன படுத்தும் வியாபாரிகள் யாழ். செயலகத்துடன் தொடர்பு கொண்டு தமது நிறுத்தல் அளத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிட்டுப் பயன்படுத்துமாறு யாழ். அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். மீறுபவர்கள மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில சந்தைகளில் இன்னமும் திராசுப்படிக்குப் பதிலாக இரும்புக் குண்டுகள், கற்கள், போன்றவை பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இதனால் நுகர்வோரே அதிகமாகப் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# கிளிநொச்சி சாரணர்களுக்கு கண்டியில் கல்விச் சுற்றுலா

(சாவகச்சேரி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு சாரண மாணவத் தலைவர்களும் கண்டியில் நடைபெறும் சர்வதேச ஜம்பொறி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் செ.சுப்பிரமணியம் தலைமையில் சென்றுள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை மறுதினம் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலந்கொள்ளும் கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளை கிளிநொச்சி மாவட்ட படைத்தரப்பினர் வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் கண்டியில் கல்விச்சுற்றுலா ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.(11)

# பெண்கள், பிள்ளைகளின் உரிமைக் கலந்துரையாடல்

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் இலங்கைப் பெண்கள் பணியகத்தினால் வடமாகாணத்தில் பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் அரச, அரசசார்பற்ற் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலானது யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வியாழக்கிழமை காலை 8.45 மணிதொடக்கம் 4.00 மணிவரை மாவட்டச் செயலக கேட்போர்கூட கீழ்த்தளத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெறும்.

# திருத்தப்படாத தபால் நிலையம்; தவிக்கும் பெரியதம்பனை கிராமம்

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகபிரிவில் உள்ள பெரிய தம்பனைக்கிராமத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட தபால் நிலையம் கடும் காற்றினால் சேதமடைந்து பல மாதங்களாகியும் திருத்தப்படாத நிலையில் காணப்படுவதாக அக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில் யுத்தம் காரணமாக பெரியதம்பனைக்கிராமத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து மீண்டும் 2010 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் மீள்குடியேறியபோது பெரியதம்பனை உட்பட அதனை அண்டிய பகுதி மக்களின் தேவை கருதி சகல வசதிகளுடனான தபால் நிலையம் அமைக்கப்பட்டது.

பல இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இத் தபால் நிலையத்தினை தரமற்ற முறையில் அமைத்ததன் காரணத்தால் 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் ஏற்பட்ட கடும் காற்றுடன் சேர்ந்த மழையின் போது கட்டடத்தின் கூரை முற்றாக சேதமடைந்து அங்கிருந்த பொருட்களும் நீரில் நனைந்து போயிருந்தன.

இதனையடுத்து தபால் நிலையத்தினை அருகில் உள்ள தனியார் ஒருவரது கடையில் இயங்க வைப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோதிலும் சேதமடைந்த கட்டடம் திருத்தப்படாது அதே நிலையிலேயே காணப்படுகின்றது.

இதன் காரணமாக அங்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் தொடர்ச்சியாக மழை, வெயிலில் கிடப்பதால் அவை மேலும் பழுதடைந்துள்ளதுடன் கறையான் அரிக்கும் நிலையில் காணப்படுகின்றன என தமது ஆதங்கத்தை தெரிவித்தனர். (160)

# பாரஊர்தி குடைசாய்ந்தது

(வவுனியா)

வவுனியா பூஓயா பகுதியியல் நேற்றுக் காலை பாரஊர்தி குடைசாய்ந்ததில் இருவர் காயமடைந்தள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பொருட்களை ஏற்றிச்சென்ற பாரஊர்தியே அதிகாலை வீதியை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது. இதன் போது பாரஊர்தியில் பயணித்த சாரதி உட்பட மேலும் ஒருவர் காயமடைந்து வவுனியா பொது வைத்திசாலையில் சிகிச்சை பெற்றனர்.

சுமார் 20 இலட்சம் பெறுமதியான உணவு பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களை ஏற்றிச்சென்றபோதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதுடன் பொருட்கள் அனைத்தும் நீரில் வீழ்ந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். (160)



இலங்கை வங்கியில் 35 வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிச் செல்லும் பருத்தித்துறை இலங்கை வங்கி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் எஸ்.மதியாபரணத்திற்கு இலங்கை வங்கி உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்ட சேவைநலன் பாராட்டுவிழாவில் பருத்தித்துறை இலங்கை வங்கி உத்தியோகத்தர் எஸ்.இராஜேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம். (01)

# "கிளைநதியின் பிரவாகம்" நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உயில் கலை, இலக்கிய சங்கத்தின் முதல் வெளியீடான சி.விமலனின் 'கிளைநதியின் பிரவாகம்' படைப்பிலக்கியப்பார்வைகள் நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.தேவரைாளி இந்துக்கல்லூரி வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

மூத்த எழுத்தாளர் நந்தினி சேவியர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வரவேற்புரையை டாக்டர் து.ராஜவேல், வெளியீட்டுரையை வடமாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் முத்து இராதகிருஷ்ணன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை உதவி விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் வழங்கவுள்ளதுடன், நூலின் முதற்பிரதியை வைஸ்ணவி நகைப்பூங்கா உரிமையாளர் லயன் ஜி.கண்ணதாசன் பெற்றுக்கொள்வார்.

# இலத்திரனியல் ஊடகங்களின் பயன்பாடு மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்

– யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் –

(யாழ்.நிருபர்)

தொலைபேசி மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு அடிமையாகும் இன்றைய மாணவர்கள் அவற்றில் உள்ள தீயவற்றை மனதில் பதித்துக் கொள்வதாலேயே சமூகப்பிறழ் நிலைகள் ஏற்படுகிறது. இவற்றைத் தடுப்பதற்கு மாணவர்களை ஏதாவதொரு கவின்கலைகலையில் ஈடுபடுத்துவது அவசிமாகும் என யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.எழில்வேந்தன் தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியின் முத்தமிழ் விழா கடந்த சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

முன்னைய காலங்களில் மாணவர்கள், இளைஞர்கள் தமது ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஏதோவொரு கலையில் ஈடுபாடுள்ளவர்களாக இருந்தார்கள். அவா சிந்தனை, செயல் எல்லாம் அந்தக் கலையின் மீதே இருந்தன.

இன்றைய மாணவர்கள் கலைகளைக் கற்றுக் கொள்வதில், ஆர்வம் காட்டுவதில்லை. பாடசாலைகளில் நடைபெறும் தமிழ்த்தின விழாக்களுடன் மட்டுமே மாணவர்கள் தமது கலையார்வத்தை நிறைவு செய்து கொள்கின்றனர்.

யாழ்.மத்திய கல்லூரி முத்தமிழ் விழாவில் இலைமறை காயாக உள்ள மாணவர்களைத் தெரிவு செய்து கலைத்திறன் போட்டிகளை நடத்திக் கௌரவிப்பதில் மகிழ்வடைகிறது. இன்றைய பட்டிமன்ற நிகழ்வில் வடமாகாணப் பாடசாலைகளின் முன்னணி மாணவர்கள் பலர் கலந்து கொள்வது மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்தார்.

இவ்விழாவில் மத்திய கல்லூரி தமிழ்ச் சங்கத்தால் 'மகிழம்' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (10)

# ஆலோசனைக்கூட்டம்

(வேலணை)

சர்வதேச மகளிர் தின விழா அடுத்த மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி விழா சம்பந்தமாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள 27 மாதர் கிராம அபிவித்திச் சங்கத்தினரையும் மற்றும் 27 கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட சமாசத்தின் தலைவர் நா.தனேந்திரன் அறிவித்துள்ளார். (05)

# மதகுகள் உடைப்பு

(பருத்தித்துறை)

தம்பசிட்டி வீதியில் நீர் வடிகால் அமைப்பதற்கென ஏற்கனவே இருந்த மதகுகள் உடைக்கப்பட்டு ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

இதனால் பெரும்பாகம் இந் நடவடிக்கைக்காக எடுக்கப் படுகின்றது.

இதனை நகரசபையினர் கண்டும் காணாதுபோல இருக்கின்றார்கள் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (109)

# ஸ்வயம் சேவா சங்கத்தின் பிரதேச உறுப்பினர்கள் தெரிவு

(வலிகாமம்)

அகில இலங்கை இந்து ஸ்வயம் சேவாசங்கத்தின் உடுவில் பிரதேச கிளைக்குரிய உறுப்பினர்கள் தெரிவு கடந்த மாதம் இடம்பெற்றது.

இச்சங்கத்தின் உடுவில் பிரதேச இணைப்பாளர் என்.பி. [illegible]ந்திரன் தலைமையில் மருதனார் மடம் ஆஞ்சநேயர் மண்டபத்தில் இடம்பெற்ற இத் தெரிவில் பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக பண்ணிசை ஆசிரியையும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய செல்வி க.சிவயோகராணி, உபதலைவராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சிவரன், செயலாளராக மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை ஆசிரியை திருமதி எஸ். சோமநாதன், உப செயலாளராக செல்வி சு.கலைவாணி, பொருளாளராக இராமநாதன் கல்லூரி ஆசிரியை திருமதி சு.ஸ்ரீனிவாசகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக மேலும் அறுவர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலயக்குருக்கள் க.சுந்தரேஸ்வரக்குருக்கள், இக் கிளைச்சங்கத்தின் போசகராக செயற்பட்டு வருகிறார். (06)

# பாடசாலைகளுக்கு நினைவு மலர்

(யாழ்.நிருபர்)

15 ஆவது கௌரவ ஆளுநர்கள் மாநாடு கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற இம்மாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட நினைவு மலர் மற்றும் அறிவுசார் நூல்கள் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நூலகப் பாவனைக்காக இந்த நூல்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பாடசாலைகள் இலக்கம் 34, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநர் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (10)

# அபிவிருத்திக்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலையில் கடந்த 4 வருடங்கள் அதிபராக கடமையாற்றிய அதிபர் ஏ.அருள்தாசன் ஓய்வு பெற்றதை அடுத்து புதிய அதிபராக யாழ்.சென்.றோக்ஸ் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிய கெனத்மேரியன் கடந்த 15 ஆம் திகதி முதல் தனது கடமைப் பொறுப்பினை ஏற்றுள்ளார்.

இதனை முன்னிட்டு முன்நாள் அதிபரின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் நலன் சார்ந்த சங்கங்கள் புனரமைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரும்பிராய் சென்மைக்கல் தேவாலய பங்குத்தந்தை அருள்திரு யூட் நிக்ஷன் விருந்தினராகக் கலந்து கொண்டு பாடசாலை முன்னேற்றத்தில் பெற்றோர், பழைய மாணவர்கள், பாடசாலை சங்கங்களில் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துக்கூறினார்.

பாடசாலையின் புதிய அபிவிருத்திக்குழு தெரிவு செய்யப்பட்டது. இதன்படி - ஞா.கெனத்மேரியன் (அதிபர்) தலைவராகவும், நா.இராசநாயகம் செயலாளராகவும், திருமதி சுதர்சினி சயல் உபசெயலாளராகவும், திருமதி ஜெ.யோகராணி (ஆசிரியை) பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், நிர்வாகசபை உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (31)

# அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் 3000 மில்லிலீற்றர் கசிப்பை தன்வசம் வைத்திருந்த நபருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரைக் கிளிநொச்சி பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி குறித்த நபருக்கு மேற்படி தொகையை அபராதமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (கே)

# டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

அகில இந்திய முகாமைத்துவக் கற்கை நெறிகள் நிறுவனம் பல்வேறு துறைசார்ந்த ஆறுமாதகால டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தபால் மூலக் கற்கைநெறிகளாக இவை காணப்படுகின்றன.

உளவியல் டிப்ளோமா, சிவில் எஞ்சினியரிங் டிப்ளோமா, மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா, வியாபார முகாமைத்துவ டிப்ளோமா, காரியாலய நிர்வாக முகாமைத்துவ டிப்ளோமா, தாதியார் நிர்வாக டிப்ளோமா, மொண்டிசூரி டிப்ளோமா, வங்கி முகாமைத்துவ டிப்ளோமா, கல்வி முகாமைத்துவ டிப்ளோமா, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி டிப்ளோமா முதலான பல்துறைசார் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கை முடிவில் கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அநுராதபுரம், நுவரெலியா முதலிய இடங்களில் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் பெயர், முகவரி, தெரிவு செய்த கற்கைநெறி என்பவற்றை 077 714 0844, 071 803 4848 இலக்கங்கங்கள் கொண்ட தொலைபேசிக்கு குறுந்தகவல் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் இணைப்பாளர், மருதூர் ச. ஹசன், அகில இந்திய முகாமைத்துவ கற்கை நெறிகள் நிறுவனம், 24, 1 ஆம் மாடி, நவீன சந்தைத் தொகுதி, பிரதான வீதி, சாய்ந்தமருதூர் - 07 என்ற முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம். விண்ணப்பிக்கும் இறுதித் திகதியென எதுவும் இல்லை. (06)



முள்ளியவளை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையொன்று முல்லைத்தீவு - முறிப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது பொலிஸ் அதிகாரி உரையாற்றுவதையும், கலந்துகொண்ட மாணவர்களையும் மற்றும் மருத்துவ பரிசோதனை இடம்பெறுவதையும் காணலாம்.

உன் வாழ்க்கையின் எந்த ஒரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சினையையும் நீ சந்திக்காமல் முன் செல்கிறாயோ, அப்பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.

- சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தன் குற்றம் காண்கிற் பின் தீதுண்டோ!

நாம் அனுபவித்த – அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்ப துயரங்களுக்கெல்லாம் காரணம், ஒருவித "உயர்ந்தோர்" மனோபாவத்தை நம்மில் சிலர் கொண்டிருப்பதுதான் என்று தோன்றுகிறது. இது எப்போதும் நம்மைத் "தனித்துவமானவர்கள்" என்று பார்க்கிறது. மற்றவர்களிடம் காணும் குறைகளையே பெரிதாகக் கண்டு மனம் உழல்கிறது. மற்றவர்கள்தான் திருந்த வேண்டும், வென்றவர்கள்தான் இறங்கிவர வேண்டும் என்று சொல்லிக்கொண்டு சாதாரண மக்களின் வேதனைகளை நீட்டிக்கவும் தயாராக இருக்கிறது.

நம்முடைய இந்த மேட்டிமை மனோபாவம் அகன்றாலே, மற்றவர்களுடனான சகஜ உரையாடல் சாத்தியம். எல்லோரும் மனிதர்கள், எல்லோரும் குறைகள் உள்ளவர்கள், எல்லோரும் தவறு செய்தவர்கள், எல்லோரும் வீம்பு உடையவர்கள், எல்லோரும் சந்தேகமும் கொண்டவர்கள் என்ற புரிதலிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். நல்லிணக்கம் என்பது அடுத்தவரிடமுள்ள தவறுகளைச் சொல்லிக் கொண்டிருப்பதால் வருவதல்ல; அவர்களிடமும் இருக்கும் சரிகளைப் புரிந்துகொள்வதால் வருவது அது.

அடுத்தவரிடம் இருக்கும் குறைகள் உடனடியாக நம்மால் கவனிக்கப்படுகின்றன. அதற்கு அவர்களிடம் ஏதாவது நியாயமான காரணம் இருக்கலாம் என்று கூட நம்மால் யோசிக்க முடிவதில்லை. நம் குறைகளுக்கோ காரணங்கள் மட்டும் தான் வலுவாக வைத்திருக்கிறோம். அந்தக் காரணங்கள் இல்லா விட்டால் நாம் பத்தரை மாற்றுத் தங்கம் தான்.

அடுத்தவர் திருந்தித்தான் நமக்கு எதுவும் ஆகும் என்று காத்திருப்பது முட்டாள்த்தனம். அவர்களைத் திருத்துவதும் நம் கையில் இல்லை. மாறாக குறைகளை நீக்கிக் கொண்டு நாம் திருந்தினால் நம் வாழ்க்கையில் அடையும் பயன்கள் ஏராளமானவை. அதன் மூலம், அடுத்தவர்களும் நம்மைப் பார்த்து மாற வெட்கத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தி, அவர்களும் மாற வாய்ப்புண்டு.

ஒரு தமிழ் சினிமாப் பாடல் உண்டு. "சுட்டும் விரலால் எதிரியைக் காட்டி குற்றம் கூறுகையில் மற்றும் மூன்று விரல்கள் உங்கள் மார்பினைக் காட்டுமடா. மூடர்களே பிறர் குற்றத்தை மறந்து முதுகைப் பாருங்கள் முதுகில் இருக்கு ஆயிரம் அழுக்கு, அதனைக் கழுவுங்கள்"

வள்ளுவரும் இதைச் சொல்லியிருக்கிறார். "ஏதிலார் குற்றம் போல் தன்குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"

அதிகாலை வேளை, கணவனும் மனைவியும் தேனீர் குடித்தபடி ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்து விட்டு துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள்.

பார்த்துக் கொண்டே இருந்த கணவன் சொன்னான். "அந்தப் பெண்ணுக்குத் துவைக்கவே தெரியவில்லை போல் இருக்கிறது. துணியில் அழுக்கே போகவில்லை பார்"

மனைவியும் பார்த்தாள். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை. ஒவ்வொரு நாளும் அவர்கள் எழுந்து தேனீர் குடிக்கும் நேரமும், பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைக்கும் நேரமும் ஒன்றாகவே இருந்ததால் கணவன், அடுத்த வீட்டு சலவை சரியில்லாதது பற்றி ஒவ்வொருநாளும் சொல்லிக் கொண்டேயிருந்தான்.

திடீர் என்று ஒரு நாள் பக்கத்து வீட்டுப் பெண்மணி துவைத்து உலர வைத்த போது துணிகள் பளிச்சென்று சுத்தமாக இருப்பதைப் பார்த்த கணவன் சொன்னான். "ஒருவழியாக இப்போது அந்தப் பெண் துவைக்கக் கற்றுக் கொண்டு விட்டாளா இல்லை நல்ல சோப்பை பயன்படுத்த ஆரம்பித்து விட்டாளா என்று தெரியவில்லை... இன்று தான் துணிகள் பளிச்சென்று சுத்தமாக இருக்கின்றன.."

மனைவி அமைதியாகச் சொன்னாள். "இன்றைக்கு அதிகாலையில் தான் நான் நம் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளைச் சுத்தம் செய்தேன்"

- ஆசிரியர்

# இராணுவ முகாம்களாக பயன்படுத்திய காணிகளுக்கு 400 மில்லியன் நட்டஈடு

(கொழும்பு)

இராணுவ முகாம்களை அமைப்பதற்காக பயன்படுத்திய காணிகளுக்காக 400 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ முகாம்களை அமைப்பதற்கு தனியார் காணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பயன்படுத்தப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சம்பூர் மற்றும் பலாலி ஆகிய பிரதேசங்களில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக பாரியளவில் தனியார் காணிகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

தேசிய பாதுகாப்புக்கு முக்கியமான காணிகள் பொதுமக்களுக்கு மீளவும் வழங்கப்படமாட்டாது.

இராணுவத்தினர் பயன்படுத்தாத காணிகள் மீளவும் காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும்.

பலாலி இராணுவ முகாமை அண்டிய 11000 ஏக்கர் காணியை இராணுவத்தினர் பயன்படுத்தியதாகவும், இதில் 5000 ஏக்கர் காணி மீளவும் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பயணிகள் தரிப்பிடம் மோசமான நிலையில்

(மன்னார்)

மன்னார் பிரதேசசபை பிரிவுக்கு உட்பட்ட நொச்சிக்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடம் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாக அந்தப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் - முருங்கன் பிரதான வீதியில் நொச்சிக்குளம் கிராமம் அமைந்துள்ளது. நொச்சிக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக இந்தப் பயணிகள் தரிப்பிடம் உள்ளது. இந்த தரிப்பிடம் பல மாதங்களாக கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்த தரிப்பிடத்தின் கூரைப்பகுதி உடைந்த நிலையில் காணப்படுவதுடன், தரிப்பிடம் கட்டாக்காலிகளின் உறைவிடமாகவும் தற்போது காணப்படுகின்றது.

இந்தத் தரிப்பிடம் உரிய முறையில் பராமரிக்கப் படாததன் காரணத்தினால் போக்கு வரத்திற்காக காத்திருக்கும் பயணிகள் தரிப்பிடத்திற்கு வெளியில் நீண்ட நேரம் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

# சமுர்த்தி திட்டத்தின் கீழ் மீள் குடியேற்ற கிராமங்கள் புனரமைப்பு

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்ற கிராமங்கள் அனைத்தையும் சமுர்த்தி திட்டத்தின் கீழ் உள்வாங்கியமையால், அக்கிரா மங்களின் அடிப்படைத் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப் படும் என வவுனியா பிரதேச செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திட்டத்தின் ஊடாக வாழ்வாதார செயற்பாடுகள் இக்கிராமங்களில் முன்னெடுக்கப்படும் எனவும் திவிநெகும திட்டம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் ஊடாக அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் சுழற்சிமுறை வாழ்வாதாரக் கடன்களை அறிமுகப் படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் எமது பிரிவுக்கு உட்பட்ட கிராமங்களின் பிரச்சினைகளை இந்த வருடமே தீர்த்து வைக்கக் கூடியதாக இருக்கும் எனவும் வவுனியா பிரதேச செயலர் தெரிவித்தார்.

மின்சாரம் வழங்குவது தொடர்பிலும் நாம் பிராந்திய மின் பொறியியலாளருடன் கலந்துரையாடியுள்ளோம்.

இதற்கு இணங்க அவர்களும் தமது நடவடிக்கைகளை விரைவுபடுத்தி செயற்ப்ட்டு வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

# மனித உரிமை பேரவை அமர்வுகள்; எதிராக செயற்பட சில சக்திகள் ஆர்வம்

(கொழும்பு)

ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ள நிலையில், சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்கு எதிராக செயற்படுவதில் தீவிரம் காட்டி வருவதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து மண்டியிடமாட்டார்.

வீரியமாக எழுந்து நின்று சவால்களை எதிர் நோக்குவார்.

ஹரிஸ்பத்துவ பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில வெளிநாட்டு சக்திகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர், மகிந்த ராஜபக்ஷ என்பது யார் எங்கிருந்து வந்தார் என்பதனை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# பொதுநலவாய மாநாட்டில் சிங்கப்பூர் பங்கேற்கும்

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க விருப்பம் கொண்டுள்ளதாக சிங்கப்பூர் அறிவித்துள்ளது.

சிங்கப்பூரின் வெளியுறவுத்துறை அமைச்சர் கே. சண்முகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக இலங்கையின் அரச சார்பு பத்திரிகை தெரிவித்துள்ளது.

கே. சண்முகத்தை இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

இதன்போது இலங்கை பெற்றுள்ள சமாதானம் மற்றும் உறுதிப்பாடு அந்த நாட்டுக்கு மாத்திரமல்ல, பிராந்தியத்தின் அனைத்து நாடுகளுக்கும் நன்மை பயக்கக்கூடியது என்று ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

# மொரட்டுவை பல்கலை மீண்டும் திறக்கப்படுகிறது

(கொழும்பு)

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் கல்வி நடவடிக்கைளுக்காக மீண்டும் எதிர்வரும் 26ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

இதேவேளை தேசிய தொழில்நுட்ப கற்கைகள் நிலையத்தையும் மீண்டும் அந்நாளில் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போது பொறியியல் பீடத்தை எதிர்வரும் 26ஆம் திகதி திறப்பதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொறியியல் பீட மாணவர்களுக்கும் தேசிய தொழில்நுட்ப கற்கைகள் நிலையத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இடையில் கடந்த மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற மோதலில் மாணவர் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

இதன் பின்னதாக மொரட்டுவை பல்கலைக் கழக பொறியியல் பீடம் மற்றும் தேசிய தொழில் நுட்ப கற்கைகள் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது தெரிந்ததே.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 24

**குறித்த செய்தியை வெளியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் பத்திரிகை நிர்வாகத்தை கடுமையான தொனியில் நடேசன் தொலை பேசியில் தொடர்புகொண்டு எச்சரித்ததுடன், குறித்த பத்திரிகைக்கு எந்தவொரு செய்திகளையும் வழங்கக் கூடாது என புலிகளின் குரல் நிறுவனத்திற்கும் விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகத்தில் இயங்கிய ஊடக இல்லத்திற்கும் கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.**

■ வே. அர்ச்சுணன்

சுதந்திரபுரம் பகுதியில் புலிகளின் குரல் நிறுவனம் சுதந்திரமாக இயங்கிய போதிலும் அப்பகுதியிலும் நீண்ட நாட்களுக்கு தாக்குப் பிடிக்க முடியவில்லை. படைத்தரப்பினர் சகல முனைகளின் ஊடாகவும் முன்னேறிக் கொண்டு சுதந்திரபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது சுதந்திரபுரத்திலிருந்து இரணைப்பாலை செந்தூரன் சிலையடியை அண்டிய பகுதிக்கு புலிகளின் குரல் நிறுவனம் இடம்மாறவேண்டிய அவசர தேவை உருவாகியது. இதன்பின்னர் இறுதியாக முள்ளிவாய்க்கால் பகுதியில் இந் நிறுவனம் யுத்தம் முடிவடையும் வரை இயங்கியது அனைவரும் அறிந்த விடயமே.

சுதந்திரபுரத்தில் புலிகளின் குரல் இயங்கிய காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் அல்லது களமுனையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பான செய்திகளை ஊடகங்களிற்கு வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பொறுப்பாக எவரும் செயற்பட முடியாத அளவிற்கு நிலைமைகள் இறுக்கமாக இருந்தன. விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளராக இருந்த இளந்திரையன் என்பவரை ஊடகங்கள் தொடர்பு கொள்ள முற்பட்ட போதிலும், அந்த தொடர்புகள் ஊடகங்களிற்கு கிடைப்பது அரிதாகவே இருந்தது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகமும் புலிகளின் குரல் நிறுவனமும் மட்டுமே உத்தியோக பூர்வமாக வன்னிப் பகுதியில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பான செய்திகளை வழங்குகின்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தன.

குறித்த இரண்டு ஊடகங்களும் முள்ளிவாய்க்கால் வரை தொலைத்தொடர்பு வசதிகளைப் சீராகப் பேணி வந்தமை குறிப்பிடத் தக்கது. தென்னிலங்கை ஊடகங்கள், வெளிநாட்டு ஊடகங்கள் யாழ்ப் பாணத்து ஊடகங்கள் என அனைத்து ஊடகங்களும் புலிகளின் குரல் நிறுவனத்துடன் தொர்டர்பு கொண்டு செய்திகளை குறிப்பாக புலிகளால் வெளியிடப்படும் செய்திகளை மட்டும் பெறமுடிந்தது. இந்தச் செய்திகளை வழங்கும் பணியை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசனின் பணிப்புரைக்கு அமைவாக இறைவன் எனப்படும் தவபாலன் பொறுப்பெடுத்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் யாழ்ப் பாணத்தில் இயங்கி வந்த முன்னணிப் பத்திரிகை என்று கூறுகின்ற நாடாளுமன்ற உறுப்பினரின் பத்திரிகை புலிகளை மேற்கோள் காட்டி புலிகள் தங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி குறித்த செய்தியை வெளியிட்டதாகக் கூறி களமுனை தொடர்பான முரண்பாடான செய்தி ஒன்றை வெளியிட்டது. இதனை அடுத்து குறித்த செய்தி தொடர்பில் அனைத்துலக ஊடகங்கள் புலிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது புலிகள் தாங்கள் குறித்த செய்தியை வெளியிடவில்லை என்று குறிப்பிட்டதுடன், குறித்த செய்தியை வெளியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் பத்திரிகை நிர்வாகத்தை கடுமையான தொனியில் நடேசன் தொலைபேசியில் தொடர்புகொண்டு எச்சரித்ததுடன், குறித்த பத்திரிகைக்கு எந்தவொரு செய்திகளையும் வழங்கக் கூடாது என புலிகளின் குரல் நிறுவனத்திற்கும் விடுதலைப் புலிகளின் அனைத்துலக தொடர்பகத்தில் இயங்கிய ஊடக இல்லத்திற்கும் கண்டிப்பான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

இதனை அடுத்து வெற்றிலையில் கூடுதல் நாட்டமுடைய குகநாமம் பூண்ட குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் பத்திரிகையின் செய்தியாளர் இறைவனிடம் வன்னிப் பகுதி செய்திகளைப் பெறுவதற்கு மிகவும் பௌவியமாக தொடர்புகளை ஏற்படுத்தி செய்திகளைப் பெறுவதற்கு முயற்சித்த போதிலும் இறைவன், குறித்த செய்தியாளரிடம் யாழ்ப்பாண நிலைமைகளையும், யாழ்ப்பாண செய்திகளையும் கேட்டுவிட்டு, வன்னியில் ஏதாவது விசேடமாக நடந்தால் உங்களுக்குத்தான் முதலில் அறிவிப்போம் எனக்கூறி தொடர்பைத் துண்டித்து விடுவார். ஆனால் ஏனைய ஊடகங்கள் தொடர்புகொண்டால் வன்னிப் பகுதியின் யுத்த நிலமைகள் தொடர்பான செய்திகளை இறைவன் வழங்கிவந்தார்.

வன்னிப்பகுதியை முற்றுமுழுதாக படையினர் கைப்பற்றுகின்ற சூழல் உருவாகி வந்த போதிலும், இறுதிவரைக்கும் தலைவரிடம் திட்டம் இருக்கிறது என்ற போக்கில் புலிகளின் குரல் மக்களைப் போராட்டப் பாதையில் இருந்து திசைதிரும்பாத அளவிற்கு தனது ஊடகப் பரப்புரை மூலம் மக்களை நம்பிக்கை ஊட்டி வந்தபோதிலும் ஆனந்தபுரப் பகுதியில் இறுதியாக இடம்பெற்ற யுத்தத்தைத் தொடர்ந்து மக்கள் புலிகளின் குரல் நிறுவனத்தின் மீதும் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர். புலிகளின் குரல் நிறுவனம் வழங்கிவந்த செய்திகளையும் மக்கள் நம்ப மறுத்தனர். தொடர்ச்சியான ஷெல் மழைக்கு மத்தியிலும், குண்டுவீச்சுகளின் மத்தியிலும், உணவுத் தட்டுப்பாடுகள் மத்தியிலும் வாழத் தொடங்கிய மக்கள் நம்பிக்கை இழந்தே காணப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்திலாவது புலிகள் அரசாங்கத்திடம் ஒரு உடன்பாட்டுக்கு வந்து எங்களைப் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வழிஏற்படுத்த வேண்டும் என்றே மக்கள் எண்ணிக்கொண்டார்கள். ஆனால் மக்களின் இந்த நம்பிக்கை அவநம்பிக்கையாக மாறத்தொடங்கியதை தொடர்ந்து மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து படைக் கட்டுப்பாட்டு பகுதிக்கு பல்வேறு சிரமங்களின் மத்தியில் போகத்தொடங்கினர். இவ்வாறு சென்ற மக்களை புலிகள் தடுத்த போதிலும் மக்கள் புலிகளின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தினம் தினம் வெளியேறத் தொடங்கினர்.

இவ்வாறு மக்கள் வெளியேறத் தொடங்கியது புலிகளிற்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த சூழ்நிலையில், புலிகளின் குரல் நிறுவனம் பெரியளவிலான பரப்புரை ஒன்றினை மேற்கொள்ள ஆரம்பித்தது.

அதாவது படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்கின்ற மக்களை படையினர் கொடுமைப் படுத்துவதாகவும் எனவே மக்களை படைக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதை தவிர்த்து புலிகளின் படையணிகளுடன் இணைந்து முன்னேறிவரும் படையினரை விரட்டுவதற்கு முன்வர வேண்டுமென புலிகளின்குரல் பெருமளவிலான பிரசாரங்களை மேற்கொண்டு வந்த பொழுது புலிகளின் பல பொறுப்பாளர்களும் பல உறுப்பினர்களும் மாத்தளன், பொக்கணை, வலைஞர்மடம் போன்ற பகுதிகளில் இருந்து தங்களது குடும்பங்களுடன் படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு புலிகளிற்குத் தெரியாமல் தப்பி ஓடத் தொடங்கினர்.

இதனை அடுத்து, மக்களைக் கட்டுப்படுத்துவது புலிகளிற்கு பெரும் சங்கடமான நிலைமையாக மாறத்தொடங்கியது. மக்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு பதில்சொல்ல முடியாமல் புலிகள் திண்டாடினர். இந்தச் சந்தர்ப்பத்தில் இறுதித் தாக்குதல் ஒன்றை படைத்தரப்பினர் மீது பெரியளவில் நடத்தப்போகின்றோம் என்ற பரப்புரை வன்னியில் வேகமாக முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பரப்புரை புலிகளின் குரல் நிறுவனத்தினால் வேகமாக முன்னெடுக்கப்பட்டது. மாத்தளன் சந்தியில் புலிகளின் பிரசாரக் கூட்டமொன்று இடம்பெற்றது. கடற்புலிகளின் விசேட தளபதி சூசை இக்கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த பொழுது பொது மக்கள் பல கேள்விக் கணைகளை தொடுக்கத் தொடங்கினர். அத்துடன் கட்டாய ஆட்சேர்ப்புத் தொடர்பிலும் மக்கள் சூசையிடம் வெளிப்படையாகக் கேட்கத் தொடங்கினர். இதற்குப் பதிலளித்த சூசை, இந்த நடவடிக்கைகள் ஒரு சொற்ப நாட்களுக்கே இடம்பெறும். அதுவரையும் பொறுமையாக இருக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். இந்தக் கூட்டத்தில்தான் சூசையை விடுதலைப் புலிகளின் முப்படையினதும் ஒருங்கிணைப்புத் தளபதி என்று அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஒருங்கிணைப்புத் தளபதி பதவி நிலை சூசைக்கு கிடைத்த போதிலும், புலிகளிற்குரிய ஆயுத வழங்கல் சீராக கடல்வழியாக கிடைக்காத சூழ்நிலையில் புலிகளால் பெரியளவிலான எதிர்த்தாக்குதலையோ அல்லது யுத்தமுனையையோ திறக்கமுடியாத சூழல் நிலவியமை அனைவரும் அறிந்த விடயம். ஆனால் தொடர்ந்தும் மக்களை நம்பிக்கையூட்டி முள்ளிவாய்க்கால் வரை இழுத்துச் செல்வதற்கு ஊடகங்களே வழிகாட்டின. இவ்வாறு மக்களையும் ஆபத்தான கட்டத்திற்கு கொண்டு சென்று இறுதியில் விடுதலைப் புலிகளையும் அழிக்கின்ற செயற்பாட்டில் ஊடகங்களிற்கும் கூடுதலான பங்களிப்புண்டு இவ்வாறு விடுதலைப் புலிகளை அழிப்பதில் துணை நின்ற ஊடகங்களை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

**புலிகளிற்குரிய ஆயுத வழங்கல் சீராக கடல்வழியாக கிடைக்காத சூழ்நிலையில் புலிகளால் பெரியளவிலான எதிர்த்தாக்குதலையோ அல்லது யுத்தமுனையையோ திறக்கமுடியாத சூழல் நிலவியமை அனைவரும் அறிந்த விடயம். ஆனால் தொடர்ந்தும் மக்களை நம்பிக்கையூட்டி முள்ளிவாய்க்கால் வரை இழுத்துச் செல்வதற்கு ஊடகங்களே வழிகாட்டின.**





# தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்; செயற்படுகிறார் நவிபிள்ளை

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நவநீதம்பிள்ளை இலங்கை விடயத்தில் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறார்.**

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை விடயத்தில் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பட்டு வருகிறார் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது என அரசாங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.**

மனித உரிமை ஆணையாளர் என்ற உயர் பதவியிலிருந்துகொண்டு அவர் இலங்கை மீது குற்றம் சுமத்துவதிலேயே குறியாக செயற்பட்டு வருகிறார் என அரசாங்கத்தின் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வல தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறாயினும், எந்த விதமான சவால்களுக்கும் இலங்கை அரசாங்கம ஜெனிவாவில் முகங்கொடுக்கும் எனவும் அவற்றை எதிர்கொள்வதற்கான இயலுமை இலங்கைக்கு உள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பல தசாப்தகால பிரச்சினையின் முடிவில் உடனடியாக மெஜிக் காட்ட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்துள்ள அறிக்கை குறித்து விபரிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் கண்டனங்களை கவனத்திற் கொள்வதில்லை என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்ட நவநீதம்பிள்ளை, சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையும் கண்டித்துள்ளார்.

இந்த நிலையில், அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிராக தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் என்ற உயர்ந்த பதவியில் இருந்து கொண்டு நவநீதம்பிள்ளை இவ்வாறு இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை சுமத்த வேண்டும் என்பதிலேயே குறியாக செயற்பட்டு வருகிறார்.

நவநீதம்பிள்ளை இவ்வாறு இலங்கைக்கு எதிராக திட்டமிட்ட ரீதியிலும், நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலும் செயற்பட்டு வருகிறார் என்பதைப் புரிந்துகொண்டுள்ள நிலையில் அது குறித்து அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

மாறாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் விடுக்கப்படுகின்ற அனைத்து சவால்களுக்கும் முகம்கொடுப்பது எமது நிலைப்பாடாகும். நாங்கள் சவால்களுக்கும் புதிய நிலைமைகளுக்கும் முகங்கொடுப்போம். அவற்றை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். இதற்காக நாங்கள் தயாராகி வருகின்றோம் என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தை வெளியேற்ற முயற்சிக்கிறார் ரணில்

(கொழும்பு)

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற ரணில் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு சென்று உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வரும் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், விடுதலைப் புலிகள் இயங்கிய காலத்தில் வடக்கிற்கு செல்வதனை நினைத்துகூட பார்க்கவில்லை.

வடக்கிலிருந்து படையினரை வெளியேற்ற ரணில் கடும் முயற்சி எடுத்து வருகின்றார். இதற்கு முன்னரும் இவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

படையினரை வடக்கிலிருந்து வெளியேற்றிக்கொண்டால் என்ன நடக்கும் என்பதனை சிந்தித்து பார்க்க வேண்டும்.

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் எவ்வளவு முக்கியமானது என்பதனை பொதுமக்கள் கூட அறிந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில், எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக இராணுவத்தை வெளியேற்றுமாறு விடுக்கும் கோரிக்கை நகைப்பிற்குரியது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## சர்வதேச பாடசாலைக் கல்வியில் சகல பாடங்களும் அவசியம்



(கொழும்பு)

சர்வதேச பாடசாலைகளில் சமயம், தாய்மொழி மற்றும் வரலாறு ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் வரலாற்றைப் பற்றித் தெரியாமல் எவ்வாறு நாட்டைப் பற்றி பேசுவது? சர்வதேச பாடசாலைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையிலான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அடிக்கடி பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

பாடசாலை மாணவ, மாணவியரிடம் பணம் பெற்றுக் கொள்வதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்களின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயும் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## போரில் வெற்றி பெற்றாலும் சமாதானத்தில் தோல்வியே

போர் வெற்றிகொள்ளப்பட்ட போதிலும், சமாதானம் தோல்வியடைந்துள்ளது என்பதனை தைரியமாக செல்ல முடியும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வாழ்க்கைச் சரிதத்தை விரைவில் எழுதி வெளியிடத் திட்டமிட்டுள்ளேன்.

மககள் கட்சியின் கொள்கைகள் குறித்து அமைச்சர் ராஜித சேனாரட்ன கருத்து வெளியிட்டமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

இன்றைய சூழ்நிலைகளின் அடிப்படையில் கருத்து வெளியிடுவோருக்கு நாளை என்ன நடக்கும் என்பது தெரியாது.



கடந்த ஏழு ஆண்டுகளாகவே நான் துன்புறுத்தப்பட்டுள்ளேன். ஊடகங்கள் இது குறித்து கேள்வி எழுப்புகின்றன. நான் அழுத்தங்கள் பற்றிய தகவல் க[illegible] வெளியிடப்போவதில்லை.

அனைத்து மக்களும், அனைத்து நிலைமைகளும் மாற்றமடையும் என்ற கௌதம புத்தரின் கோட்பாட்டை நான் நம்புகின்றேன் என சந்திரிகா தெரிவித்துள்ளார். மக்கள் கட்சியின் தலைவர் விஜய குமாரதுங்கவின் நினைவு நிகழ்வில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## பாரத லக்ஷ்மன் கொலை தொடர்பில் துமிந்த சில்வாவுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் உள்ளிட்ட நால்வரது கொலைச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு எதிராக நேற்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய 22 பேரல் நாடாளுமன்ற உறுப்பினர் துமிநத சில்வா உள்ளிட்ட 13 பேருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிமன்ற நதவான் பிரசந்த அல்விஸ் முனனிலையில் இந்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செயயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிரான இந்த வழக்கை 6 ஆம் இலக்க நீதிமன்றத்தில் விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முன்னாளர் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரன் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்பது குறிப்பிடத்தக்கது.

## மாலக சில்வா வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியது நீதிமன்றம்



(கொழும்பு)

இராணுவப் மேஜர் அதிகாரி ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக இனங்காணப்பட்டுள்ள அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வா வெளிநாடுகளிற்கு செல்ல சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொளளப்பட்ட போதே மாலக சில்வா வெளிநாடுகளிற்குச் செல்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

மாலக சில்வா சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கிணங்க இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 5 ஆம் திகதி வரை வெளிநாட்டுப் பயணங்களுக்கு அனுமதி வேண்டும் என வழக்கு விசாரணைகளின் போது மாலக சில்வாவின் சட்டத்தரணி வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கைக்கு மீண்டும் வந்தவுடன் கட்டாயம் அறிவிக்க வேண்டும் எனவும் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## பன்றி இறைச்சி இறக்குமதிக்குத் தடை

இந்தியாவிலிருந்து பன்றி இறைச்சி இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தியாவில் பரவி வருகின்ற பன்றிக் காய்ச்சல் காரணமாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் எடுத்து வரப்பட்ட 400 கிலோ கிராமிற்கும் அதிகமான பன்றி இறைச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அடம்பன் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் ரெஜிபோமில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப் பன்றி இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது.

## சுதேஸ்கர் சார்பில் கட்டாரில் மேன்முறையீடு

(கொழும்பு)

கட்டாரில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள இலங்கையின் வெங்கடாசலம் சுதேஸ்கர் என்ற இளைஞரின் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மேன்முறையீட்டுக்கான சட்டச் செலவை ஏற்றுக் கொள்ள இலங்கை தூதரகம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

27 வயதான இந்தியரான ஆரிப் மொஹிதீன் என்பவரை கொலை செய்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரில் சுதேஸ்கருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.


எனினும் கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினர் குருதிப்பணத்தை பெற்றுக் கொள்ள இணங்கியமையை அடுத்து அதனைச் சேகரிக்கும் நடவடிக்கைகளில் சுதேஸ்கரின் குடும்பத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் 2011 ஆம் ஆண்டு கட்டாருக்கு தொழிலுக்காக சென்ற சுதேஸ்கர் தாம் பணிபுரிந்த மொத்த வியாபாரத் தளத்தின் உரிமையாளரின் வீட்டில் பணிபுரிந்த பெண்ணுடன் உறவு வைத்திருந்திருந்தார்.

அதேநேரம் அந்த வீட்டின் சாரதியாக செயற்பட்ட இந்தியரான ஆரிப் மொஹிதீனும் குறித்த பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார்.

இதன்போது ஏற்பட்ட முறுகலை அடுத்தே சுதேஸ்கர், கத்தியால் குத்தி ஆரிப்பை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் நிலையம் திறந்துவைப்பு



(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்திற்கு பின்னர் கிளிநொச்சியின் நன்னீர் மீன் பிடித்துறை வேகமாக அபிவிருத்தி கண்டு வருகிறது. இதற்காக கடற்றொழில் நீரியல்வள அமைச்சு பல மில்லியன் ரூபாவை செலவு செய்து பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறது என யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் 230 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் கிளிநொச்சி பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலய திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நனனீர் மீன்பிடித்துறையானது நூற்றுக்கணக்கானவர்களின் முக்கிய பிரதான வாழ்வாதார தொழிலாக விளங்குகின்றது. நன்னீர் மீன்பிடியை நம்பி பல நூற்றுக் கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இரணைமடுக் குளத்தில் மட்டும் மூன்றரை இலட்சம் ரூபா வரையான மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

மேலும் பல குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும் மீன்களை சினைப்படுத்தும் மத்திய நிலையம் ஒன்றினை அமைக்கவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் ராஜித சேனாரட்ன நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் என்னை சந்திக்கின்ற போதெல்லாம் பல்வேறு உதவிகளை கோருவார். அவை அனைத்தும் இந்த பிரதேச மக்களினதும், பிரதேசத்தினதும் அபிவிருத்தி மற்றும் நலன்கள் தொடர்பானதாகவே இருக்கும். அந்த வகையில் இன்றும் இங்கு பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கான சந்தை வாய்ப்பபை பெற்றுத்தருமாறு கேட்டிருக்கின்றார். அதனடிப்படையில் இந்த வருடம் நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டு ஒரு ஐஸ் உற்பத்தி நிலையம் ஒன்றினை அமைக்கவும் குளிர்சாதன வாகனம் ஒன்றைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட கோப்பாய் கல்விக் கோட்டத்திலுள்ள சில பாடசாலைகளில் குறித்த சில பாடங்களுக்குரிய பாட ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்த பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் மாணவர்களின் பெற்றோர்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

புத்தூர் - வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியர் பதவி உயர்வு பெற்று, பிறிதொரு பாடசாலைக்கு பிரதி அதிபராக சென்றுள்ள நிலையில், இந்த வருட ஆரம்பத்திலிருந்து அப்பாடசாலை மாணவர்களுக்கு விஞ்ஞான பாடத்தினை கற்பிப்பதற்கு விஞ்ஞான பாட ஆசிரியர் இல்லையெனவும், இதனால் தமது பிள்ளைகள் விஞ்ஞான பாடத்தினைக் கற்பதில் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவதாகவும் பெற்றோர்கள் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தில் இடைநிலை வகுப்புக்களிற்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் இப்பாடங்களை கற்பதில் மட்டுமன்றி நடைபெறவுள்ள பரீட்சைகளை எதிர்நோக்குவதிலும் பல சிக்கல்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கும் பெற்றோர்கள், இப்பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர். (03)



நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையத்தில் நடத்தப்படும் இலவச தையல் பயிற்சி ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யூ.ஆர்.பிறண்ட் பௌண்டேசன் நிறுவனத்தின் தலைவர் கே.செவ்வேள், யாழ்.மாநகரசபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் எஸ்.லோகசிவம் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டித்திறந்து வைப்பதையும், அருகில் நிலையத் தலைவர் இ.மயில்வாகனம் நிற்பதையும், தையல் பயிற்சி பெறும் மகளிர், தையல் பயிற்சி ஆசிரியருடன் நிற்பதையும் காணலாம். (08)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 21. 02. 2013




- புரிந்து கொள்ளமுடியாத உலக வறுமை
- பிரச்சினைகளுக்குள்ளேயே தொடங்கி முடியும் விவசாயம்
- புலிகளின் வீழ்ச்சி திரைமறைவில் அரங்கேறிய இரகசியத் திட்டம்!
- போப்பாண்டவரின் திடீர் இராஜினாமா



விதி வழி எது?

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் இதுதான் தினமுரசு

## மெய்வல்லுநர் போட்டி


(சிறுப்பிட்டி)

சிறுப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் மதியம் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் நா. மகேந்திரராராஜா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.டி.பி.டி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலஸ்ரின், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விக் கோட்ட பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணிம், வலி கிழக்கு பிரதேச எதிர்க் கட்சித் தலைவர் இ. ஐங்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (03)

*

உடுத்துறை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று மதியம் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் வே. புவனேந்திராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பகிரங்க ஆணைக்குழுவின் ஓய்வுநிலை உறுப்பினரும், இலங்கை நிர்வாக சேவை அதிகாரியுமான வி. தர்மகுலசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணிக் கோட்டக் கல்வி அதிகாரி க. பொன்னையா, ஈ.பி.டி.பி.யின்வடமராட்சிஅமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

## மஹேல ஆடுவதில் சந்தேகம்



(கொழும்பு)

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் முன்னாள் கப்டன் மஹேல ஜெயவர்த்தன பங்குகொள்ள மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

35 வயதான மஹேல ஜெயவர்த்தன, இலங்கையின் உள்ளூர் தொடரான பிறீமியர் லீக் முதல் தரப் போட்டித் தொட ரில் தனது எஸ்.எஸ்.சி அணிக் காகப் பங்குபற்றும்போது காயமடைந்த தன் காரணமாகவே பங்களாதேஷ் தொடரில் பங்குபற்றுவது சந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது.

களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது பிடியொன்றைப் பிடிக்க முனைந்தபோதே மஹேல ஜெயவர்தனவின் விரலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழக்கமான விரல் உபாதைகளுக்கு 2 - 4 வாரங்கள் தேவைப்படும். அதேவேளை, மஹேல ஜெயவர்த்தனவிற்கு 4 - 6 வாரங்கள் தேவைப்படலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.அவ்வாறான நிலை ஏற்பட்டால் பங்களாதேஷ்க்கு எதிரான தொடர் முழுவதிலும் மஹேல ஜெயவர்த்தன பங்குகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவர்பங்கு கொள்ளாத இடத்து சமரவீர களமிங்குவார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது, டெஸ்ட் போட்டி மார்ச் 8ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.சி.சி. கனவு அணியில் இலங்கை வீராங்கனை



(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிட்ட உலக கனவு அணியில் இலங்கை அணியின் அதிரடி வீராங்கனை இஷானி கௌஷல்யா இடம்பிடித்துள்ளார்.


இந்தியாவில் நடைபெற்ற பெண்கள் உலகக் கிரிக்கெட் தொடர் நிறைவடைந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையினால் இந்தக் கனவு அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள 12 பேர் கொண்ட குழாமில் ஆசியாவைச் சேர்ந்த ஒரே வீராங்கனையாக இஷானி கௌஷல்யா இடம்பெற்றுள்ளார். அத்தோடு இலங்கை அணியின் தலைவியா ஷிகலா சிரிவர்தனவும் 12 பேர் கொண்ட குழாமில் இடம்பெறக் கலந்துரையாடப்பட்ட போதிலும், ஏனைய வீராங்கனைகளால் முந்தப்பட்டார்.

இவ் அணியின் தலைவராக நியூசிலாந்து அணியின் தலைவியும், போட்டித் தொடரின் நாயகியாகத் தெரிவாகியவருமான சுசி பேட்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: சுசி பேட்ஸ்(நியூசிலாந்து), சார்லற் எட்வேர்ட்ஸ் (இங்கிலாந்து), ராசல் ஹெய்ன்ஸ் (அவுஸ்ரேலியா), ஸ்ரபானி ரெய்லர் (மேற்கிந்தியத் தீவுகள்), டீன்ட்ரா டொட்டின் (மேற்கிந்தியத் தீவுகள்), இஷானி கௌஷல்யா (இலங்கை), ஜோடி பீல்ட்ஸ் (அவுஸ்ரேலியா), கத்தரின் பிரன்ற் (இங்கிலாந்து), ஹொலி கொல்வின் (இங்கிலாந்து), அனியா ஷ்ரப்சோல் (இங்கிலாந்து), மேகன் ஸ்கட் (அவுஸ்ரேலியா).12ஆவது வீராங்கனை: ஹோலி பேர்ளிங் (அவுஸ்ரேலியா)

## தலைமையில் அதிக வெற்றி ஸ்மித் சாதனை



(ஜொப்டவுன்)

டெஸ்ட் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பதிவாக்கிய கப்டன் என்ற சாதனையை தென்னாபிரிக்க அணிக் கப்டன் ஸ்மித் படைத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டிலும் தென்னாபிரிக்கா வென்று தொடரை கைப்பற்றியது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி தொடர்ந்து 6ஆவது டெஸ்ட் தொடரை கைப்பற்றி முத்திரை பதித்துள்ளது. மேலும் தொடர்ந்து 5ஆவது டெஸ்டில் வெற்றி பெற்றது.இந்த வெற்றிமூலம் தென்னாபிரிக்க கப்டன் ஸ்மித் புதிய சாதனை படைத்தார். டெஸ்டில் இவரது தலைமையில் 49 வெற்றிகள் கிடைத்துள்ளன. இதன்மூலம் டெஸ்டில் அதிக வெற்றி பெற்ற கப்டன் என்ற சாதனையை அவர் படைத்தார். இதற்கு முன்பு ரிக்கி பொண்டிங் 48 டெஸ்டில் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.

அண்மையில் நிறைவடைந்த பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது 100 போட்டிகளுக்குத் தலைமை தாங்கி முதல் வீரர் என்ற மைக் கல்லை ஸ்மித் அடைந்தார். இந்நிலையில் தலைமைத்துவத்தில் புதிய சாதனையை ஏற்படுத்தி வரும் ஸ்மித்திற்கு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மற்றும் சக வீரர்கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றார். இது குறித்து கலிஸ் குறிப்பிடுகையில், ஸ்மித் தனது இலக்கில் வெற்றியடைந்து செல்கின்றார். இன்னும் நிறைய போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்கு தலைமை தாங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிடம் உதவி கோரியது ஆப்கான்

தமது நாட்டு கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவுமாறு இந்திய கிரிக்கெட் சபையை ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிரான போரால் ஆப்கானிஸ்தான் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு அமைதி திரும்பி வருகிறது. இதையடுத்து அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் காண கவனம் செலுத்தி வருகிறது.இதில் ஒருஅங்கமாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியை பலமிக்கதாக உருவாக்க திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான அணி உருவாக்கப்பட்டு உலக கோப்பையில் பங்கேற்றது. அவர்கள் அனைவரும் 19 வயதைக் கடந்து விட்டதால் 20 வீரர்கள் கொண்ட புதிய அணியை உருவாக்கியுள்ளது. மலேசியாவில் வருகிற மே 1ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஏசியன் கிரிக்கெட் கோப்பைக்கான போட்டி நடக்கிறது. இதில் இடம்பெற ஆப்கானிஸ்தான் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதில் சிறப்பாக விளையாடினால்தான் உலக கோப்பை போட்டியில் விளையாட தகுதி பெறமுடியும். இதையடுத்து அணியை துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் பலப்படுத்த ஆப்கானிஸ்தான் திட்டமிட்டுள்ளது. இதற்காக இந்திய கிரிக்கெட் சபையின் உதவியை நாடியுள்ளது. இதுதொடர்பாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் மும்பை வந்து இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். இதில் ஆப்கானிஸ்தான் அணியை பலப்படுத்த தேவையான உதவிகளை இந்தியாவிடம் முறைப்படி கோரப்பட்டது. கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் சஞ்சய் ஜக்டேல், பொது மேலாளர் ரத்னானர் ஷெட்டி ஆகியோரும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை சார்பில் அதன் சேர்மன் ஷகாஸதா மசூத் திட்ட மேலாளர் பஷீர் ஸ்டானெக்ஸாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மிஸ்பாவின் ஆதங்கம்

எமது நாட்டில் சர்வதேசப் போட்டிகள் இடம்பெறாமல் இருப்பதே எங்களது முன்னேற்றத்தைப் பாதித்து வருகின்றது என மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார். 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் விஜயம் மேற்கொண்ட இலங்கை வீரர்கள் மீது தீவிரவாதத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் இலங்கை வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் பயணம் மேற்கொள்ள ஏனைய நாடுகள் மறுத்து வருகின்றன. இதன் காரணமாக பாகிஸ்தானில் இடம்பெற வேண்டிய போட்டிகள் அபுதாபி, டுபாய், ஷார்யா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெற்று வருகின்றன. இதனால் சொந்த நாட்டில் போட்டிகளில் பங்குபற்றும் அனுகூலம் பாகிஸ்தானுக்குக் கிடைப்பதில்லை.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மிஸ்பா உல் ஹக், பாகிஸ்தானுக்கு ஏனைய நாடுகள் வருகை தராமை எங்களைப் பொறுத்தவரையில் பிரச்சினையான ஒன்று. சொந்த நாட்டில் போட்டிகளில் பங்குபற்றாமல் முன்னணி டெஸ்ட் நாடாக ஓர் அணியால் உருவாக முடியாது. அத்தோடு கடந்த ஆண்டில் பாகிஸ்தான் அணி 6 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றியிருந்தது. வீரர்கள் டெஸ்ட் போட்டிகளுக்காகத் தங்களைத் தயார்படுத்துவதிலும் பிரச்சினை உள்ளது. கடந்த இரண்டரை வருடங்களாக பாகிஸ்தான் அணி சிறப்பாகப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த போதிலும், போதியளவு போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பட்டம் வென்றமை மகிழ்ச்சி

விரைவில் பழைய நிலைக்கு திரும்பிவிடக்கூடிய வாய்ப்பு அதிகம் இருப்பதாக நட்சத்திர ரென்னிஸ் வீரர் நடால் தெரிவித்தார்.

காயம் அடைந்த முழங்காலில் இன்னும் வலி இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆட்டத்துக்குத் தேவையான உடல் தகுதியைப் பெறுவதற்காக போட்டிகளில் பங்கேற்று வருகிறேன். அந்த வகையில் பிரேசில் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. மெல்ல மெல்ல விரைவில் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடுவேன் என நம்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கெய்ல், டரன் சமி அதிரடி நீக்கம்

சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இருந்து மேற்கிந்தியதீவுகள் அணிகளின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல், கப்டன் டரன் சமி ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

சிம்பாம்பே, மேற்கிந்தியத்தீவு அணிகளுக் கிடையிலான 3 ஒருநாள் போட்டி தொடர் நாளை மறுதினம் மேற்கிந்தியத்தீவின் செயின்ட் ஜோர்ஜில் நடைபெறவுள்ளது.

இதில் முதல் இரண்டு ஒருநாள் போட்டிக்கான மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கப்டன் டேரன் சமி, அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.


கப்டனாக சகலதுறை வீரர் வெய்ன் பிராவோ நியமிக்கப்பட்டுள்ளார். விக்கெட் கீப்பர் தேவோன் தோமஸ், வேகப்பந்து வீச்சாளர் ஜோசன் ஹோல்டர் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

சுழற்பந்து வீச்சாளர் வீராசாமி பெருமாள், தினேஷ் ராம்டின், சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் ராம்நரேஷ் சர்வான் ஆகியோர் அணிக்கு திரும்பி உள்ளனர்.

இதேவேளை, தொடர்ந்து மோசமாக விளையாடி வரும் நிலையில் கெய்ல் நீக்கப்பட்டுள்ளதாகவும், அணியை தொடர்ந்து மேற்கிந்தியத்தீவு அணிகள் தோல்வியைச் சந்தித்து வருவதாலும், சகல துறை வீரராக விளங்கும் சமி அண்மைக் காலமாக தொடர்ந்தும் சொதப்பி வருவதாலும் நீக்கப்பட்டுள்ளதாக மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


# 96ஆவது பொன் அணிகளின் போர்

## சொந்த இடத்தில் அசத்துமா யாழ்ப்பாணக் கல்லூரி





**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

JAFFNA COLLEGE 1823 1872 CEYLON



ரீ. நிமலேந்திரா (கப்டன்)



எஸ். விபீஸ் (துணைக் கப்டன்)



எஸ். மதுஷன்



வி.சோபிநாத்சுவன்


ஆர். நிலக்ஸன்



பி. அபிராஜ்



பி. ரவிவர்மன்



எஸ். மிதுஷன்



பி. பிரவிந்த்



எல். மிதுஷன்


ஆர். விஷ்ணுஜன்


பி. பிரிந்தாவன்


கே. கிரிகரன்


எஸ். லிங்கராஜ்



(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போர் என வர்ணிக் கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி வரும் 22,23ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெறும் இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்போட்டி 96ஆவது ஆண்டாக நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது பெரும் கிரிக்கெட் தொடராக இரு அணிகளுக்குமிடையிலான இத்தொடர் வர்ணிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 95ஆவது போட்டி யில் அடைந்த தோல்வியை ஈடு செய்யும் வகை யில் யாழ்ப்பாணக் கல்லூரியின் களவியூகம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் சொந்த இடத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளமையால் யாழ்ப்பாணக் கல் லூரி அணிக்கு கூடுதல் பலமாக அமையும் என எதிர்பாரக்கப்படுகின்றது. அதேவேளை, பந்து வீச்சு, களத்தடுப்பு என சகல துறை களிலும் சிறந்த ஜொலிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி, இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் இந்த ஆண்டு நடத் தப்பட்ட பல போட்டிகளில் வெற்றிகளைப் பதிவாக்கியிருக்கின்றது.

எனவே, 96ஆவது பொன் அணிகளின் போரில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ளும் முனைப்புடன் யாழ்ப்பாணக் கல்லூரி அணி களமிறங்கும் என நம்பலாம். (எஸ்.பி.)

# பிரதேச மட்ட மென்பந்து

## திருநெல்வேலி கலாமன்றம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பா்ண பிரதேச மென்பந்து கிரிக்கெட் போட்டியில் திருநெல்வேலி கலாமன்றம் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற் றிக்கொண்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழாவை முன்னிட்டு தற்போது பெருவிளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இப்போட்டித் தொடர் ஐந்து ஓவர்களாக இடம்பெற்றது. பிரதேச செயலகத்திற்குபட்ட பல அணி கள் பங்குகொண்ட போதிலும், இதன் இறுதிப் போட்டிக்கு நொதோண் அணியும், திருநெல்வேலி கலாமன்றம் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நொதோண் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுசன் 22, பிரகாஷ் ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துஷாந், திருத்தணிகன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலை யில் களமிறங்கிய திருநெல்வேலி கலாமன்றம் அணி நொதோண் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறியது. இதனைத் தொடர்ந்து சுதாகரித்துக் கொண்ட திருநெல்வேலி அணி ஆட்டத்தைப் பரபரப்பான நிலையை அடையச் செய்தது. இறுதி யில் 4.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து ஒரு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் யாழ்ப்பாண பிரதேச சம்பியன் பட்டத்தை திருநெல்வேலி கலாமன்றம் அணி கைப்பற்றிக் கொண்டது. (எஸ்.பி.)




தெல்லிப்பளைப் பிரதேச மட்ட பெண்களுக்கான கடிப் போட்டியில் இளவாலை இளஞ்சுடர் அணி சம்பியன் பட்டம் வென்றது. கடந்த 3ஆம் திகதி இளவாலை இளஞ்சுடர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இளவாலை இளஞ்சுடர் அணி சம்பியன் பட்டம் வென்றது. மாவட்ட கபடிப் பயிற்றுநர் முகுந்தன், மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் சுதா- கரன் ஆகியோருடன் சம்பியன் பட்டம் வென்ற இளஞ்சுடர் அணியைக் காணலாம். (93)



# காட்டோடைகளும் கங்காணிகளும்

**– அருணன் மதுரா –** 4

இதன்பின் அப்பிளின் பாதையில் பல சுவாரஸியமான மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஜொப்ஸ் வெளியேற்றப்பட்ட அடுத்த சில ஆண்டுகளில், அப்பிள் நிறுவனம் தொடர்ந்து பெரும் இலாபத்தை ஈட்டுகிறது. இதை வைத்து, சந்தைகளும், நிதி வல்லுநர்களும் அப்பிள் ஒரு திடமான பாதையில் நடை போடுவதாகக் கணிக்கிறார்கள். (ஜொப்ஸ் வெளியேற்றப்பட்ட



செய்தி வெளியானவுடன், பங்குச் சந்தையில், அப்பிளின் பங்குகள் 7% உயர்ந்தன) நியூட்டனின் முதல் விதி இவ்வாறு சொல்கிறது. "ஒரு பொருளின் மீது வெளிப்புறவிசையொன்று செயல்படும் வரை எந்த ஒரு பொருளும் தனது ஓய்வு நிலையையோ அல்லது நேர்கோட்டில் அமைந்த சீரான இயக்க நிலையையோ மாற்றிக் கொள்ளாது." மிகக் குறுகிய காலப் பார்வையில் பார்க்கும் போது, நிறுவனத்தில் எல்லாம் சரியாகப் போய்க்கொண்டிருப்பதாக ஒரு தோற்றம் இருக்கும். ஆனால், சந்தை, தொழில்நுட்பம் என்னும் வெளிப்புற விசைகள் ஒரு நிறுவனத்தைத் தாக்கத் துவங்கும் போதுதான், அந்நிறுவனத்தின், முன்னோக்கிச் செல்லும் திறனும், அதைச் செலுத்தும் தலைவனின் திறனும் வெளியில் தெரியும்.

மூன்றாண்டுகள் தொடர் நிதி நிலை வெற்றி எவருக்குமே போதை தரக்கூடியதுதானே. ஸ்கல்லி, ஒரு பெரும் தலைவராக மாறி, பெரும் பிரகடனங்களை விடுக்கிறார். **ஜொப்ஸின் கனவான, உயர்** தொழில்நுட்பத்தை நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும் திட்டத்தை மறுக்கிறார். உயர் தொழில்நுட்பம் ஒரு போதும், ஒரு நுகர்வுப் பொருளாகாது என. ஒரு விஷயத்தைப் பற்றி அதிகம் தெரியாத போது அதைப் பற்றிப் பெரும் பிரகடனங்களை வெளியிடுவதுதான் எவ்வளவு எளிதாக இருக்கிறது. ஆனால் அடுத்த சில ஆண்டுகளில், அப்பிள் நிறுவனம் சரியத் துவங்குகிறது. ஏனெனில், மிக விரைவாக மாறிவரும் தொழில்நுட்ப வியாபாரத்தில், சந்தைக்கு அடுத்து அடுத்துக் கொடுக்க அப்பிளில் புது விஷயங்கள் இல்லை. ஸ்கல்லி, அப்பிளில் இருந்து வெளியேற்றப் படுகிறார்.

இது ஜொப்ஸுக்கு மிகக் கடும் சினத்தை உருவாக்குகிறது. ஸ்கல்லி, ஊழல் மனிதர்களை உள்ளே அழைத்து, ஊழல் விழுமியங்களை உருவாக்கி, அப்பிளை அழித்து விட்டார் என்று குமுறுகிறார். அவர்கள் செய்ததெல்லாம், தங்களுக்கும், அப்பிளுக்கும் மேலும் பணத்தை . மட்டுமே சேர்த்ததுதான். அப்பிளை மேலே மேலே எடுத்துச் செல்லும் பொருட்களை உருவாக்க அவர்கள் ஒன்றுமே செய்யவேயில்லை. பொருட்களின் தரத்தை, சாத்தியங்களை அதிகரித்து, அவற்றை நுகர்வோருக்குச் சரியான விலையில் தராமல், ஸ்கல்லி அதீத இலாப நோக்கில், கையில் இருக்கும் அப்பிள் பொருட்களின் விலையை மட்டும் அதிகரித்து, சந்தையில் அப்பிள் பொருட்களின் விற்பனைச் சதவீதத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, அதை வீழ்ச்சிப் பாதையில் போக விட்டார் என்கிறார்.

1985இல் ஜொப்ஸ் வெளியேற்றப்பட்டவுடன், முதல் மூன்று நான்காண்டுகள் வரை இலாபத்தில் இருந்த அப்பிள் மெல்ல மெல்ல சரியத் துவங்கியது.

ஸ்கல்லி, 1993 இல் மோசமான வியாபாரம் நட்டம்



காரணமாக வெளியேற்றப் பட்டார். அதைத் தொடர்ந்து வந்த மைக்கேல் ஸ்பின்ட்லர், அப்பிளை, பல நிறுவனங்களுக்கு விற்க முயன்றார். அது தோல்வியில் முடிய, அவரும் வெளியேற்றப்பட்டு, அடுத்ததாக கில் அமேலியோ என்னும் ஆராய்ச்சி நிபுணர் தலைமைப் பொறுப்பேற்றார். அப்பிளின் வீழ்ச்சி தொடர்ந்தது.

நிறுவனத்தை நடத்தத் திணறும் அமேலியோ, ஜொப்ஸின் ஆலோசனையை நாடுகிறார். மெல்ல மெல்ல ஸ்டீவ் ஜொப்ஸ், மீண்டும் அப்பிளின் உள்ளே நுழைகிறார் - அமேலியோவின் ஆலோசகராக. நுழைந்த சிறு காலத்திலேயே, அமேலியோ வெளியேற்றப்படுகிறார். காரணம் - ஸ்டீவ் ஜொப்ஸ். அப்பிள் நிறுவனத் தலைவராக ஜொப்ஸ் விரைவில் முழுப் பொறுப்பேற்றுக் கொள்கிறார். ஆனால், சம்பளம் வாங்க மறுத்து விடுகிறார். வருடத்திற்கு, ஒரு டொலர் மட்டுமே ஒரு அடையாள ஊதியம். ஆனால், திரும்ப அப்பிளுக்கு வந்த ஜொப்ஸ், கொஞ்சம் மாறிய மனிதராக இருந்தார். அப்பிளில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்பு, மீண்டும் இரண்டு நிறுவனங்களை நடத்திய அனுபவம் அவரைக் கொஞ்சம் பண்படுத்தியிருந்தது எனச் சொல்லலாம்.

**(தொடரும்)**



# 28 வயதில் உலகப் பிரசித்தம்!

பூ ஜுன்.:.பெங்க், (boo junfeng) 28 வயதே நிரம்பியவர். ஆனால் உலகப் புகழ்பெற்ற சிங்கப்பூர் இயக்குநர். "மண் கோட்டை"தான் இவரது முதல் கதைப்படம். கேன்ஸ் திரைப்பட விழாவில், சர்வதேசத் திரை விமர்சகர்கள் வாரத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட படம்! ஹனோய் நகரில் நடந்த வியட்நாம் சர்வதேசத் திரைப்பட விழாவில் கலந்துகொண்ட "மண் கோட்டை" திரைப்படத்திற்கு சிறந்த கதைப்படம் மற்றும் சிறந்த இயக்குநர் விருதுகள் கிடைத்தன!

"வோல்ஸ்ட்ரீட் ஜேர்னல்" வெளியிட்ட பட்டியலில், 2010ஆம் ஆண்டில் ஆசியாக் கண்டத்திலிருந்து வெளிவந்த திரைப்படங்களில் குறிப்பிட்ட படம் என்று "மண் கோட்டை" படத்தை சிலாகித்துப் பேசியிருக்கின்றனர்.

யென் என்னும் இளைஞன் சிங்கப்பூர் இராணுவத்தில் சேர்வதற்கு முன்னால் அவன் வாழ்வில் நடக்கும் சம்பவங்கள்தான் படத்தின் ஜீவநாடி. அவனது இளவயதுக் காதல், வயதான அவன் தாத்தாவின் மரணம், மறதி நோய் கொண்ட அவனது பாட்டியின் சுகவீனம், அவன் தாயாரின் காதல் விவகாரம் முதலியன அவன் வாழ்வில் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. அவனது தந்தை மாணவராக இருந்தபோது சமூகப் போராளியாக இருந்த சம்பவங்கள்... இவைதான் கதை!

"சிங்கப்பூர் காகா" (Singapore Gaga) சிங்கப்பூரைச் சேர்ந்த இசைவாணர்களைப் பற்றிச் சொல்லும் படம் இது. அதைப்போலவே "881". 105 நிமிடங்கள் ஓடும் ஓர் இசைக் காவியம்.

"கெடாய்" என்பது பேய்த் திருவிழா என்ற பண்டிகையின்போது மேடையில் நடக்கும் இசைக் கச்சேரி. இந்த இசைக் கச்சேரியில் கலந்துகொண்டு பாட, எல்லாப் பெண்களும் போட்டி போடுவார்கள்!

"கெடாய்" இசையின் பெண் தெய்வம் பப்பாயா சகோதரிகள் என்ற இரட்டையர்களை பேய்த் திருவிழாவில்



கலந்துகொண்டு பாட ஆசீர்வதிக்கிறாள். கச்சேரி மேடையில் பப்பாயா சகோதரிகளுக்கும் துரியன் சகோதரிகளுக்கும் பாடல் போட்டி நடக்கிறது. பப்பாயா சகோதரிகளில் சின்னவள் உணர்ச்சிவசப்பட்டுப் பாடி- மூக்கில் ரத்தம் வடிய, மேடையில் மயங்கி விழுந்து விடுகிறாள். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதும் மெல்ல மெல்ல மரணம் அடைகிறாள்.

ஆனால் அன்று அந்த சகோதரிகள் மேடையில் பாடிய பாடல் அமரத்துவம் வாய்ந்த பாடலாக மக்களால் போற்றப்படுகிறது. கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண உடைகளில் நடன மாதர்களும் ஆண்களும் நடனம் ஆடுவது கண்கொள்ளாக் காட்சி. திரையில் ஒரு சொர்க்க லோகத்தை சிருஷ்டி செய்துவிடுகிறது.

## முடியாது! முடியாது!!

- பாம்பால் கேட்க முடியாது.
- கிவி பறவையால் பறக்க முடியாது.
- குதிரையால் படுத்து உறங்க முடியாது.
- நாயால் நிறங்களைக் கண்டறிய முடியாது.
- யானையால் குதிக்க முடியாது.
- நிலத்தடி எறும்புகளால் பார்க்க முடியாது.
- ஒட்டகத்தால் ஒலி எழுப்ப முடியாது.
- வௌவாலால் பார்க்க முடியாது.
- ஈயால் கேட்க முடியாது.

# சிவாவின் சவர அனுபவம்!



சகோதரரே, சத்தியாக்கிரகப் போரிலே அடிபட்டுச் சிறை புகும்படியான பாக்கியம் உனக்குக் கிடைப்பதாக வைத்துக்கொள். நீ தண்டிக்கப் பட்டுச் சிறையினுள்ளே நுழைந்த வுடன், உனக்குச் சொந்தமாக நீ தரித்திருந்த ஆடையாபரணங் களையும் சிறைச்சாலை அதிகாரி கள் வாங்கிக் கொண்டுவிடுவார்கள்.

உனக்குக் கைதியுடை கொடுப்பார்கள். முழங்கை வரையில் கூட சரியாக வராமல், இடுப்பு வரையிலேயே நிற்கும் ஒரு மேலங்கி இதை கழுத்து வழியாகப் போட்டுக் கொள்ள வேண்டும். முழங்கால் வரையில் கூட வராத ஒரு காலங்கி, தலைக்கு ஒரு குல்லாய், ஒரு கௌபீனம் (கீழுடை, கோவணம்) இவை முறையே இரண்டு சோடி ஒவ்வொரு கைதிக்கும் கொடுக்கப்படும். அதிலே ஒன்று புதியதும் மற்றது பழையதுமாம். இந்த உடையிலே ஒரு விசேஷம் குறுக்கு நெடுக்குமாய் கறுப்புக் கோடுகள் போட்டு, வெகு விநோத-கரமாய் வேஷம் போட்டது போலிருக்கும்.

கட்டை ஒன்றை கயிற்றிலே கோர்த்துக் கழுத்திலே கட்டித் தொங்கவிடுவார்கள். அதிலே கைதி நம்பர், தண்டனை, விடுதலை, வருஷம், மாதம், திகதி இவை பதிக்கப்பட்டிருக்கும். இன்றும் கைதியின் வலது கணுக்காலில் காப்புப் போன்ற வளையம் ஒன்றைப் போட்டுவிடுவார்கள். தவிர ஒவ்வொரு கைதிக்கும் இரண்டு கம்பளிகளும் ஒரு கயிற்றுப் பாயும் படுக்கையாகக் கொடுக்கப்படுகின்றன.

கைதி சிறைச்சாலைக்குள் சென்றவுடன் முழு மொட்டை யாக சவரம் செய்து கொண்டு விட வேண்டும். சாதாரணமாக கைதியின் சரீரத்தின் எந்தப் பாகத்திலும் அரையங்குலத்திற்கு மேல் நீளமுள்ளதாக ரோமம் வளர விடக்கூடாது என்பது வைத்திய விதியாக வைக்கப் பட்டிருந்தது.

சவரம் செய்வதற்கு அங்கு உபயோகிக்கப்படும் கத்திகளைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. வெறும் இரும்புத் தகடுகள். சாணை யென்றால் இன்னதென்றே அவற்றிற்குத் தெரியாது.

என்னைப் போன்ற முரட்டு ரோமங்கள் உள்ளவர்கள் இந்த சவர தினத்தன்று படுகிற கஷ்டம் இவ்வளவென்று சொல்லி முடியாது. மரண வேதனையைக் கூட அனுபவிக்கலாம். ஆனால் இந்த சவர வேதனை மாத்திரம் எத்தகையோராலும் பொறுக்கொணாதாம்! எனது சிறை வாழ்க்கையை தவ வாழ்க்கையாகவே கொண்டிருந்தேன். ஆயினும் ஞாயிற்றுக்கிழமை தினம் சவரம் செய்ய பரிகாரிகள் வந்துவிடுவார்கள். என்னுடைய சரீரமெல்லாம் நடுங்கும். அன்று நான் சவரம் செய்து கொள்வதற்குள்ளாக எனது உயிர் எண்ணற்ற தடவை எமனுலகேகி வரும்.

(சுப்பிரமணிய சிவா சிறை அனுபவங்கள்)

# பிரமாண்ட இடுப்பழகி!



அமெரிக்காவைச் சேர்ந்த, இந்த பிரமாண்ட பெண்மணியின் பெயர் மைக்கேல் ரூபினெலி, வயது 39. இவர் உலகில் மிகவும் விசேடமான பெண்மணியும் கூட. உலகிலேயே மிக பிரமாண்டமான, பெரிய இடுப்பு உடைய பெண் இவர்தான். இவரது இடுப்பின் சுற்றளவு எவ்வளவு தெரியுமா? எட்டு அடி. "மெல்லிடையாள், கொடியிடையாள் ஆகியோரை மட்டும் தான், சாதனைப் பெண்களாக கருதுவீர்களா? என் போன்ற பிரமாண்ட இடையாளையும் சாதனையில் இணைத்துக் கொள்ளுங்கள்..." என சண்டைக்கு வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார் ரூபினெலி. இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. "எப்படி, இந்த மெகா இடுப்புடன் வலம் வருகிறீர்கள். கஷ்டமாக இல்லையா?" எனக் கேட்டால், "கஷ்டமா... என் இடுப்பின் அழகை, ஒவ்வொரு நிமிடமும் அனுபவித்து, ரசித்துக் கொண்டிருக்கிறேன்..." என்கிறார்.






# கற்பது கற்கண்டா? கசப்பா?

- உதயசங்கர் -

மனிதன் தன்னுடைய வாழ்நாளிலே குழந்தைப்பருவத்தில் தான் மிக வேகமாகவும், மிக அதிகமாகவும் கற்கிறான். கற்றுக்கொள்வதில் இருக்கும் அவனுடைய ஆர்வம் எல்லையில்லாதது. நம்மில் பெரும்பாலோருக்கு பள்ளிக்கூடத்திற்குச் சென்று புத்தகங்களில் உள்ள விஷயங்களைக் கற்றுக் கொள்வது மட்டும் தான் கற்றல் என்ற எண்ணம் இருக்கிறது. இல்லை. பிறந்ததிலிருந்தே குழந்தை கற்றுக் கொண்டுதானிருக்கிறது. தன் அனுபவங்கள் மூலம் தான் கற்றுக் கொண்டதிலிருந்து தனக்கு விருப்பமானதில் ஆர்வமாய் இருக்கவும், விருப்பமில்லாததை



ஓரங்கட்டவும் பழகுகிறது. சுயமாக, சுதந்திரமாகக் கற்றுக் கொண்டுவரும் குழந்தைகளைப் பள்ளிக்கூடமென்னும் கட்டமைக்கப்பட்ட, கட்டாயக்கீழ்ப் படிதலை மட்டுமே தன் ஒழுங்கு நடவடிக்கையாகக் கொண்ட பள்ளிக்கூடங்கள் ஒருபோதும் தங்களுடைய கற்பித்தல் முறைமையைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை.

பள்ளிக்கூடங்கள் குழந்தைகளை இயந்திரங்களாகவே பாவிக்கின்றன. அடக்குமுறைக்கல்வியின் மூலம் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்தவே முயற்சிக்கின்றன. இதனால் குழந்தைகள் மனம் வெதும்பிக் கல்வியின் மீதே வெறுப்படைந்து விடுகின்றனர். எந்தக் குழந்தையும் குதூகலமாக பள்ளிக்கூடத்துக்குச் செல்வதில்லை. இது இப்போது மட்டுமல்ல. எப்போதும் இப்படியே. சிலர் நினைப்பது போல "அந்தக்காலத்திலே" என்றெல்லாம் இல்லை. இப்போதுள்ள சிறு சிறு மாற்றங்களுக்கே பெரும் போராட்டம் நடந்திருக்கிறது.

நடந்து கொண்டிருக்கிறது. காரணம் நம்முடைய சமூகத்துக்குக் கல்வி என்பது வேலைவாய்ப்புக்கான கடவுச்சீட்டு என்ற அளவிலேயே புரிதல் இருக்கிறது. அதனால் அதன் ஒரு அங்கமாக இருக்கும் ஆசிரியர்களும் அப்படியே நினைக்கிறார்கள். ஆனால் சுமார் தொண்ணூறு வருடங்களுக்கு முன்பு இந்தக் கல்வி முறை குறித்து விமர்சனம் செய்தவர், கற்றல் கற்கண்டாக இனிக்க புதிய புதிய செயல்முறைக் கல்வியை ஆய்வு செய்து அதை நடைமுறைப்படுத்தியவர், கிஜுபாய் பகேக. இவர் காந்தியின் சமகாலத்தவர்.

கற்றலின் இனிமை என்ற செயல்முறைக் கல்விமுறை, இன்றும் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு உவப்பானதாகத் தெரியவில்லை. கையில் பிரம்பு இல்லாமல் குழந்தைகளுடன் சமமாக உட்கார்ந்து விளையாட்டாகக் கல்வி போதிக்கும் முறை அவர்களுக்கு விநோதமாக இருக்கிறது. ஆசிரியர் என்றால் ஒரு பயம் வேண்டாமா? என்ற எண்ணம் அவர்கள் மனதில் வேரோடியிருக்கிறது. குழந்தைகளைப் பயமுறுத்தியே தாங்கள் அவர்களை விட உயர்ந்தவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள் என்ற அதிகாரத்தை நிலைநிறுத்த நினைக்கிறார்கள். அன்பே உருவான குழந்தைகள் தாய், தந்தைக்குப் பிறகு ஆசிரியர்களிடமே அதிக அன்பு செலுத்துகிறார்கள். பரிசுத்தமான, எதிர்பார்ப்பில்லாத அந்த அன்பை ஆசிரியர்கள் தங்களுடைய கடுமையான அடக்குமுறையினால் அலட்சியம் செய்கிறார்கள். குழந்தைகளிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்குப் பதில் தாழ்வுமனப்பான்மையை விதைக்கின்றனர்.

இதையெல்லாம் மாற்றவேண்டும் என்பதற்காக குழந்தைகளுக்குக் கல்விகற்கும் முறைமை குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயல்பட்டவர் கிஜுபாய் பகேக. தனியாகவும் மற்ற கல்வியாளர்களுடன் சேர்ந்தும் இருநூறுக்கும் மேற்பட்ட கல்வி நூல்களை எழுதியுள்ளார். அவருடைய "பகல் கனவு" என்ற நூல் எல்லோரும் படிக்கவேண்டிய புத்தகம்.

பகல் கனவு ஒரு கதை தான். ஆனால் அந்தக் கதையின் வழியே கிஜுபாய் தன் செயல்வழிக்கல்வி முறையை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். ஆம். லட்சுமிசங்கர் என்ற ஆசிரியர் கல்வி அதிகாரியிடம் அனுமதி வாங்கி ஒரு பள்ளிக்கூடத்தின் ஒரு வகுப்பை தன்னுடைய பரிசோதனை முயற்சிக்காக எடுத்துக் கொள்கிறார். அந்தப் பள்ளிக்கூடத்தில் பிரம்பின் ஆட்சியே நடந்து கொண்டிருக்கிறது. அவர் எடுத்துக் கொண்டிருந்த வகுப்பில் இருந்த மாணவர்கள் முதல் நாள் அவரை ஏமாற்றி விடுகிறார்கள். அந்தக் குழந்தைகளை வசியப்படுத்தும் கலையை மறுநாள் கண்டுபிடித்து விடுகிறார் ஆசிரியர் லட்சுமிசங்கர். கதை பிடிக்காத குழந்தைகள் இருக்கமுடியுமா? குழந்தைகள் அவருடைய கதை சொல்லும் கலையில் மயங்கிவிடுகிறார்கள். அதிலிருந்து துவங்குகிறது அவருடைய பரிசோதனை முயற்சி. வெறும் பாடப்புத்தகங்களை மட்டுமே மனனம் செய்து கொண்டிருந்த குழந்தைகள் விளையாட்டாய் எழுத்துகளைக் கற்றுக் கொள்கிறார்கள். விளையாட்டாய் வாக்கியங்களை அமைப்பதற்குக் கற்றுக் கொள்கிறார்கள். கதைப்புத்தகங்களை வாசிக்கிறார்கள். தாங்கள் சுத்தமாக இருப்பதற்குக் கற்றுக்கொள்கிறார்கள். பாடல்கள் பாடுவதற்குக் கற்றுக்கொள்கிறார்கள். படம் வரைவதற்குக் கற்றுக் கொள்கிறார்கள். நாடகம் போடுவதற்குக் கற்றுக்கொள்கிறார்கள். மரம் ஏறக் கற்றுக்கொள்கிறார்கள். கவிதையையும் கற்றுக்கொள்கிறார்கள். தம்மையும் சுற்றுப்புறத்தையும் சுத்தம் செய்யக் கற்றுக்கொள்கிறார்கள். பொம்மைகள் செய்யக் கற்றுக் கொள்கிறார்கள். எல்லாவற்றையும் விளையாட்டாகவே கற்றுக் கொள்கிறார்கள்.

இத்துடன் மொழிப்பயிற்சி, இலக்கணம், வரலாறு, பூகோளம், கணிதம் என்று எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொள்கிறார்கள். வழக்கமான மனனக்கல்வி முறையில் அல்லாமல் குழந்தைகளே மனம் ஒன்றி ஈடுபாட்டுடன் விளையாட்டாய் கற்றுத் தேர்ந்து விடுகிறார்கள். முதலாம் பிள்ளை இரண்டாம் பிள்ளை இல்லை. கெட்டிக்காரன் என்றோ மோசமானவன் என்றோ யாரும் இல்லை. எல்லோரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கிறார்கள். எனவே போட்டி, பொறாமை, இல்லை. தேர்வில் வகுப்பே பாஸாகிறது. ஒரு இனிய கனவைப் போல இந்தக் கதை விரிந்து செல்கிறது. இந்தப்



புத்தகம் குழந்தைகளின் கல்விமுறை குறித்த நம்முடைய எண்ணங்களை அப்படியே புரட்டிப் போடுகிறது. வாசித்து முடிக்கும்போது இப்படி ஒரு பள்ளி, இப்படி ஒரு வகுப்பு, இப்படி ஒரு ஆசிரியர் நமக்குக் கிடைத்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் வரும். எல்லோரும் வாசித்து நமது கல்விமுறை குறித்து ஆழ்ந்த பரிசீலனை செய்யவேண்டிய புத்தகம். சிந்தித்து, மாற்றத்தை கொண்டுவர வேண்டும். அப்போது தான் எதிர்காலக் குழந்தைகளாவது நம்மைச் சபிக்காமலிருப்பார்கள்.

படைவீரன் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே வந்தான். அவன் களைப்படைந்திருந்தான்.

தளர்ந்த கால்களுடன் ஒரு கட்டிலில் விழுந்து தன் கண்களை மூடினான்.

உள்ளே ஒரு கதவு சற்றுத் திறந்தது. அடைத்துக்கொண்டது. அதை யாரோ தாளிட்டார்கள்.

படைவீரன் விழித்தபோது வெயில் வெகுவாய் குறைந்திருந்தது. அவன் எழுந்தான். கைகளையும் உடைகளையும் பார்த்துக்கொண்டே, 'எனக்குக் குளிக்க வேண்டும்' என்றான்.

விபசார விடுதியின் தலைவி உள்ளே வந்தாள். 'என்ன வாசனைத் திரவியம் இட வேண்டும்?' என்றாள்.

'ஏதாவது' என்றான் படைவீரன். இரு கைகளாலும் தலையைத் தாங்கியபடியே. பின்னர், 'ரத்தத்தின் நாற்றம் சீக்கிரம் போவதில்லை' என்று முணுமுணுத்தான்.

விடுதியின் தலைவிக்கு ஐம்பது வயதிருக்கும். நல்ல உயரம். அழகின் நிழல்கள் இன்னும் மறையவில்லை. எந்த உணர்ச்சியையும் காட்டாத அவள் முகத்தில் தோன்றிய சிறு மாற்றம் அவன் தலையை உயர்த்தியதும் சட்டென மறைந்தது. 'குறிப்பாகக் குழந்தைகளின் ரத்தம்' என்றாள் அவள்.

படைவீரன் தன் கைகளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏரோது பயந்துவிட்டான். அவர்கள் குழந்தையை ரகசியமாகப் பார்த்து ஆராதித்துவிட்டு ஓடிப் போய் விட்டார்கள். அந்தக் குழந்தையைத்தான் நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம். அவனைத்தான் நாங்கள் கொல்கிறோம்.'

அவன் தன் இரு கைகளையும் சேர்த்துக் குவித்து அதை நோக்கியபடியே கூறினான்: 'யாருக்குத் தெரியும்? ஒருவேளை எனது இந்தக் கரங்களில் தொங்கியபடியே யூதர்களின் ராஜா இன்று இறந்திருக்கலாம்.'

விடுதித் தலைவி கூறினாள்: 'ஆம், யாருக்குத் தெரியும்.'

படைவீரன் முன்னே குனிந்து அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டான்: 'இத்தனை ஆயிரம் குழந்தைகளின் இரத்தத்தின் வழியாகவா ஒரு ரட்சகன் வருகிறான்?'

அவள் ஒன்றும் சொல்லவில்லை.

படைவீரன் கைகளில் தலையைத் தாங்கியபடி விரல்களால் கண்களையும் முகத்தையும் தேய்த்துக் கொண்டு சொன்னான்: 'உனக்குப் புரியாது. உனக்குத்தான் குழந்தைகள் இல்லையே. நான் கொலை செய்த குழந்தைகளின் முகத்தின் பதற்றத்தை நீ பார்க்கவில்லையே.'

சற்றுநேரம் இருவரும் ஒன்றும் பேசவில்லை. பின் விடுதித் தலைவி கூறினாள்: 'பாவம்!'

**விடுதித் தலைவி கேட்டாள்: 'நீங்கள் கொன்ற குழந்தைகளுக்கு, நீங்கள் அவர்களைக் கொல்லப் போகிறீர்கள் என்று தெரிந்திருக்குமா?' படைவீரன் எதிர்ப்பக்கச் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவன் முகத்தைப் பார்த்தபடி பதிலுக்காகக் காத்திருந்தாள்.**

# யாருக்குத் தெரியும்



'நீங்கள் எந்தத் தெருவுக்குப் போயிருந்தீர்கள்?' என்று கேட்டாள் அவள்.

படைவீரன் பதில் கூறவில்லை.

விடுதித் தலைவி கம்பீரமாக நடந்து முன்னே வந்து படைவீரனின் எதிரே ஓர் இருக்கையில் அமர்ந்தாள்.

'நீங்கள் கொன்ற குழந்தைகளுக்கு, நீங்கள் அவர்களைக் கொல்லப் போகிறீர்கள் என்று தெரிந்திருக்குமா?'

படைவீரன் எதிர்ப்பக்கச் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அவன் முகத்தைப் பார்த்தபடி பதிலுக்காகக் காத்திருந்தாள்..

'எனக்குக் குளிக்க வேண்டும்' என்றான் அவன்.

தலைவி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'எனக்குத் தெரியாது' என்றான் படைவீரன்.

'குழந்தைகளுக்கு மரணமுண்டுமா? மரணத்தைப் பற்றி அவைகளுக்குச் சிந்திக்கத் தெரியுமா?'

அவள் ஒன்றும் சொல்லவில்லை.

'நான் கேட்டதெல்லாம் தாய்மார்களின் அலறல்களை மட்டுமே' என்றான் அவன்.

தலைவி எழுந்து உள்ளே சென்றாள்.

படைவீரன் தன் இடுப்பு வாரிலிருந்து இரத்தம் உறைந்த ஒரு வாளை எடுத்துத் தரையில் வைத்தான். இடுப்புப் பட்டையை அவிழ்த்து வாளின் அருகே வைத்தான். பிறகு கைகளில் உறைந்த இரத்தத்தை நகத்தால் சுரண்டத் தொடங்கினான்.

விடுதித் தலைவி திரும்ப வந்து மீண்டும் அவன் எதிரே அமர்ந்தாள். 'வெந்நீர் தயாராகிறது' என்றாள். பிறகு சற்று முன்னால் குனிந்து அவனிடம் கேட்டாள்: 'நீங்கள் எத்தனை குழந்தைகளைக் கொன்றிருப்பீர்கள்?'

படைவீரன் ஒன்றும் கூறவில்லை.

முகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவள் கேட்டாள், 'நீங்கள் ஒரு நல்ல படைவீரர்தான். பத்து நூறு குழந்தைகளைக் கொல்வதற்கும் அத்தனை படைவீரர்களைக் கொல்வதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?'

படைவீரன் பதில் சொல்லவில்லை.

'குழந்தைகளுடன் உங்களுக்குச் சண்டையில்லையே. அதுதான் பிரச்சினை' என்றாள் அவள்.

அவன் சொன்னான்: 'படைவீரர்களுக்கு யாரோடுதான் சண்டை?'

பின், சற்று முன்னே நகர்ந்து, முகத்தைப் படைவீரனின் அருகே கொண்டுவந்து, குரலைத் தாழ்த்தியபடி கேட்டாள்: 'யார் அந்த ஏரோதின் விரோதி? அப்படிப் பிறந்தவன் யார்? ஒரு குழந்தையிடம் ஏன் ஏரோதுக்கு அவ்வளவு பயம்?'

'உனக்குத் தெரியாதா?' என்று கேட்டான் வீரன்.

'தெரியாது' என்றாள் அவள்.

படைவீரன் கூறினான்: 'யூதர்களின் ராஜா இங்கே பெத்லகேமில் பிறந்திருக்கிறார் என்று அவரைத் தேடி வந்த சாஸ்திரிகள் ஏரோதுவிடம் கூறினார்கள்.

**படைவீரன் முன்னே குனிந்து அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டான்: 'இத்தனை ஆயிரம் குழந்தைகளின் இரத்தத்தின் வழியாகவா ஒரு ரட்சகன் வருகிறான்?'**

படைவீரன் திடுக்கிட்டான். அவள் முகத்தை உற்று நோக்கிக் கொண்டு கேட்டான்: 'யார்? யார் பாவம்?'

அவள் சொன்னாள்: 'அந்தக் குழந்தை' யூதர்களின் வரப்போகிற ராஜா. யார் இந்த விதிகளை ஏற்படுத்தியது? நான் தாசியானதும், குழந்தைகளின் ரத்தத்தின் வழியாக அவரது வரவு அமைவதும் ஒரே விதியின் காரணத்தினாலா?'

சற்று நேரம் கழித்து அவள் மீண்டும் கூறினாள்: 'ஒரு ரட்சகன் பெருமையோடல்லவா வரவேண்டும். அந்தக் குழந்தை இந்த ரத்தத்துக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டாமா? எப்படி இந்தக் கடனைத் தீர்க்கப் போகிறது அது?'

படைவீரன் சொன்னான்: 'அவன் பிழைத்திருந்தாலல்லவா?'

இருவரும் மீண்டும் மௌனமானார்கள்.

'யாருக்குத் தெரியும்?' என்றான் படைவீரன் திரும்பவும். 'ஒருவேளை யாரெனத் தெரிந்திருந்தால் நான அவனைக் கொன்றிருக்க மாட்டேனோ என்னமோ?'

விடுதித் தலைவி கூறினாள்: 'நேர்மாறாக, யாரென அறிந்திருந்தால், முதலில் நீங்கள் கொன்றது அவனாக இருந்திருந்தால், மற்றக் குழந்தைகள் எதுவும் இறந்திருக்காது.'

'ஆனால் அப்போது ரட்சகனின் வரவு நிகழவே முடியாதே. இப்போது அதற்கு ஒரு சாத்தியமாவது இருக்கிறதல்லவா?'

'உண்மைதான்' என்றாள் விடுதித் தலைவி. கைகளை நீட்டி அவன் கால் முட்டியை வருடினாள். 'நமக்கு ரட்சகர்கள் வேண்டும். ரத்தத்தின் ஊடோ ஆரவாரத்தினூடோ அவர்கள் வரட்டும். படைவீரர்களுக்கும் வேசிகளுக்கும் ரட்சகர்கள் வேண்டும்.'

'ஆம்' என்றான் படைவீரன். 'வெந்நீர் தயாராகி விட்டதா?'

உள்ளே தாளிட்டிருந்த அறையிலிருந்து ஒரு குழந்தையின் அழுகையொலி கேட்டது. உடன் யாரோ அதை அமர்த்தினார்கள். படைவீரன் முகத்தில் ஒரு தளர்ந்த புன்னகை நிழலிட்டது.

'வேசிகள் விடுதியில் யாரு ரட்சகனைத் தேடி வரவில்லை அல்லவா? எந்தப் பெண்ணின் குழந்தை அது? ஆண் குழந்தையா? இதுவரை பிச்சைக்காரர் யாருக்கும் விற்கவில்லையா?'

முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் விடுதித் தலைவி கூறினாள்: 'அது எனது வீட்டிலுள்ள பூனைக்குட்டி. குழந்தையின் அழுகுரல் போலவே இருக்கிறது இல்லையா?'

படைவீரன் புன்னகைத்தான். 'நீ பொய் சொல்ல சிரமப்பட வேண்டாம். அது யூதர்களின் ரட்சகனாயிருந்தால் எனக்கென்ன? குளிக்க வந்தவன் நான். வேலை முடிந்து ஓய்வெடுக்க வந்திருக்கிறேன். வெந்நீர் தயாராகி விட்டதல்லவா?'

அவன் செருப்புக்களை கழற்றி ஓரமாக வைத்தான். விடுதியின் தலைவி உணர்ச்சியற்ற தன் முகத்தில் ஓர் அடங்கிய புன்சிரிப்பை வெளிப்படுத்தியபடி கேட்டாள்: 'குளித்து முடித்ததும் என் புதிய பெண்ணை உங்களிடம் அனுப்பட்டுமா?'

'வேண்டாம்' என்றான் அவன். 'குளிக்க வெந்நீர் மட்டும் கொடு. இரத்தம் படாத ஓர் அங்கியும் வேண்டும். அது போதும்.'

விடுதித் தலைவி எழுந்து உள்ளே சென்றாள்.

படைவீரன் இரத்தம் படிந்த தன் அங்கியைக் கழற்றித் தரையில் எறிந்தான். குளிக்கும் அறையிலிருந்து பாத்திரங்களில் நீர் நிரப்பும் ஒலி கேட்டது. அவன் குளியலறைக்குச் சென்றான். அவனுடைய உடைகளையும் செருப்புகளையும் அவன் படுத்து உறங்கிய விரிப்பையும் ஒரு வேலைக்காரி வெறுப்புடன் இழுத்துக்கொண்டு சென்றாள்.

நள்ளிரவு கடந்தபோது கட்டிலில் படைவீரன் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தான். உள்ளேயிருந்து தணிந்த பேச்சுக் குரல்கள் வெளிப்பட்டன.

ஒரு கதவு மெல்லத் திறந்தது. இருட்டில் இரண்டு பெண்களும் ஓர் ஆணும் படைவீரனின் கட்டிலைக் கடந்து சென்றனர். ஒரு பெண் தன் மார்போடு எதையோ சேர்த்துப் பிடித்திருந்தாள். அவர்கள் கதவைத் திறந்து தெருவில் நட்சத்திர ஒளியில் இறங்கினர். அங்கே ஒரு கோவேறு கழுதை அவர்களுக்காகக் காத்திருந்தது.

விடுதியின் தலைவி தன்னுடன் இருந்த பெண்ணிடமிருந்து அவள் மார்போடு அணைத்திருந்த குழந்தையை வாங்கினாள். அதன் முகத்தில் நட்சத்திர ஒளி விழும்படி இரு கைகளையும் உயர்த்தினாள்.

(17ஆம் பக்கம் பார்க்க)

-ஸக்காரியா (தமிழில்: எம்.எஸ்)

# பிரிந்த உறவுகளை இணைக்கும் மனிதாபிமானப்பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் போது தமது உறவுகளைப் பிரிந்து சிறுவர்களையும், குடும்பங்களையும் தேடி ஒன்றிணைக்கும் இரண்டாம் கட்ட வேலைத்திட்டம் வடக்கில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக உறவுகளைப் பிரிந்து நிற்கும் சிறுவர்களையும் குடும்பங்களையும் தேடிக் கண்டுபிடித்து ஒன்றிணைப்பதற்கான பிரதான நிலையம் கிளிநொச்சி நகரில் இந்த வாரம் உடனடியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக வீடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்திற்கென ஜப்பான் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டுள்ள 60 மில்லியன் ரூபா நிதியை யுனிசெப் நிறுவனம் வட மாகாண சபைக்கு வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். வடமாகாண சபையின் கீழ் இயங்கும் நன்னடத்தைகள், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஊடாக மேற்படி நிலையம் கண்காணிக்கப்படவுள்ளது.

பிரிந்து தவிக்கும் சிறார்களையும் அவர்களது குடும்பங்களையும் தேடிக்கண்டுபிடித்து ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தும் பொருட்டு, இந்த மேற்படி நடவடிக்கைகளில் தேர்ச்சி பெற்ற ஓய்வுபெற்ற பிரிகேடியர் கல்கமுவ திட்டத்தின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும்வடமாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலம் யுத்தத்தின் போது பிரிந்து தவித்த சுமார் 600 சிறார்கள் அவர்களது குடும்பங்களுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதா்க தெரிவித்த அவர், இது தொடர்பில் வவுனியாவில் இயங்கி வந்த மேற்படி நிலையம் மூடப்பட்டு வந்த நிலையிலேயே, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இணைப்பதிகாரி இந்த விடயம் தொடர்பில் மாதாந்தம் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க பணித்துள்ளதாகவும் வட மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ்உள்ள தேசிய அருங்கலைகள் பேரவையில் வெற்றிடமாக உள்ள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத சேவை பகுதியின்111 ஆம் தரத்தைச் சேர்ந்த 'கைப்பணிக்கைத்தொழில் விஸ்தரிப்பு உதவியாளர்' பதவிக்கு தகுதிவாய்ந்த இலங்கை விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

இதில் தகைமைகளாக

வெளிப்புற விண்ணப்பதாரர்களுக்கு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் தமிழ் மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக நான்கு பாடங்களுக்கு (04) திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் மற்றும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் பொது அறிவுப்பாடம் தவிர்ந்த 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு

தேசிய அருங்கலைகள் பேரவையின் ஆரம்ப தேர்ச்சிபெற்ற சேவை வகுதியின் பி.எல். 1:3 சம்பளத் தொகுதிக்கு உரித்தான மற்றும் ஆரம்ப தேர்ச்சி பெறாத சேவை வகுதியின் பி.எல்.1 சம்பளத் தொகுதிக்கு உரித்தான பின்வரும் தகைமைகளைக்கொண்டுள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பம் செய்ய தகுதி பெறுகின்றனர். இதில்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் தாய் மொழி மற்றும் கணிதம் உள்ளடங்கலாக நான்கு பாடங்களுக்கு (04) திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் மேற்படி சேவை வகுதியில் நிரந்தரமானதொரு பதவியில் ஆகக் குறைந்தது 05 வருடத்திற்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்போர் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உச்ச வயதெல்லை உள்ளக ஊழியர்களுக்கு ஏற்புடையதாகாது)

விண்ணப்பதாரர்கள் சகல விபரங்களையும் உள்ளடக்கிய தமது விண்ணப்பப்படிவங்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், தொழில் சார் சான்றிதழ்கள் மற்றும் அனுபவங்களை உள்ளக்கிய சான்றிதழ்களின் பிரதிகளுடன், **தவிசாளர், தேசிய அருங்கலைகள் பேரவை, ஜனகலா நிலையம், பத்த்ரமுல்லை** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் எதிர்வரும் 26ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

# புங்குடுதீவு – இறுப்பிட்டியூடான பேருந்து சேவை ஆரம்பம்

(வேலணை)

புங்குடுதீவு-இறுப்பிட்டிகிராம மக்களினது போக்குவரத்து வசதிகளை கருத்தில் கொண்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வடபிராந்திய போக்குவரத்து சபையினரால் புதிய பேருந்து சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பெருங்காட்டு கந்த சுவாமியர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள சந்தியில் இருந்து இந்தப் போக்குவரத்து சேவை இடம் பெறவிருக்கின்றது.

வேலணைப் பிரதேசசபையின் தலைவர் சி. சிவராசா (போல்) இந்த புதிய பஸ் சேவையினை சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைத்தார்

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலையில் உள்ள அதிகாரிகள் புங்குடுதீவில் உள்ள வடஇலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி யமுனா பொன்னம்பலம் உட்பட புங்குடுதீவில் உள்ள பொது நிறுவனங்களினது பிரதிநிதிகள் பொது மக்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பலவருடங்களாக யாழ்ப்பாணத்தில் இருந்து இறுப்பிட்டி கிராமத்திற்கான பேருந்துசேவைகளோ அன்றி தனியார் சிற்றூர்திசேவைகளே இடம் பெறாமல் இருந்துவந்துள்ளது.

இப்பகுதி மக்கள் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டுமாயின் மூடை முடிச்சுகளுடன் கால்நடையாக அதிக தூரம் நடந்து வந்து பேருந்தில் ஏறிச் செல்லவேண்டும். துவிச்சக்கர வண்டி அல்லது பெரும்பணச் செலவில் முச்சக்கரவண்டி (ஆட்டோ) ஆகியவற்றை வாடகைக்கு அமர்ததியே சென்று வந்தனர்.


தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இச் சேவையானது மக்களினது போக்கு வரத்து வசதிக்கு ஏற்றதாக அமைந்துள்ளது எனவும், இச் சேவைக்கான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் ஏற்படுத்தி தந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதேசசபையின் தலைவர் ஆகியோருக்கு மக்கள் நன்றியினை தெரிவித்துள்ளனர்.

(05)



அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பாதிப்படைந்த வற்றாப்பளை முள்ளியவளை வீதி உரியவர்களின் கவனிப்பு இன்றி போக்குவரத்துக்கு இடையூறாகக்காணப்படுவதைக் காணலாம்.

# ஆயுர்வேதம்



## முழங்கால், மூட்டுகளில் பிடிப்பு... "படக்" சப்தம்!

வயதாகிவிட்டால் பெரும்பாலும் எதிர்நோக்குகின்ற ஒரு சிக்கல் மூட்டுப்பிடிப்பு. சிலருக்கு முழங்காலை நீட்டி மடக்கும் போது கடுமையான வலியும் 'படக்' என்ற சப்தமும் ஏற்படும். மூட்டுப்பகுதியில் பிடித்துக் கொள்ளும். சிறிதுநேரம் முன்னும் பின்னும் அசைத்தால் மட்டும்தான் அந்தப் பிடிப்புவிடும். இதைக் குணமாக்க ஆயுர்வேதத்தில் வழி உண்டு.

ஆவரண வாயு என்ற ஒன்றை ஆயுர்வேதம் குறிப்பிடுகிறது. அதாவது, தனது சுதந்திரமான அசைந்து நகரும் தன்மையை, வாயு மற்ற தோஷங்களின் வாயிலாக இழக்கும்போது அல்லது அவற்றால் சூழப்படும்போது அது ஆவரண வாயு என்று பெயர் பெறுகிறது. இப்படிச் சூழ்ந்து வெளியே வர முடியாத நிலையிலுள்ள வாயுவை, உடல் வெளிப்புற மற்றும் உட்புறக் குளிர்ச்சியினால் வளர விட்டுவிட்டால், மேற்குறிப்பிட்ட உபாதைகள் காணத் தொடங்கும்.

வாயுவை நகர்த்த முடியாதபடி எவையெல்லாம் செயல்படுகிறதோ,அவற்றையெல்லாம் முதலில் அப்புறப்படுத்த வேண்டும். கொட்டஞ்சுக்காதி சூரணம் எனும் மருந்தை புளித்த மோருடன் கலந்து சூடாக்கி கால் மூட்டில் பற்றிட்டு, காலையில் சுமார் 3/4 – 1 மணி நேரம் வரை வைத்திருந்து, வெந்நீரால் கழுவி விட வேண்டும். இதைத் தொடர்ந்து சுமார் 21 – 48 நாட்கள் வரை செய்து வர, எது வாயுவைச் சூழ்ந்து நிற்கிறதோ அவை அவ்விடம் விட்டு விலகிவிடும். இந்தச் சிகிச்சையின் மூலம் முடங்கிக் கிடந்த வாயு, வெளிக்குக் கொண்டு வரப்பட்டு விடுவிக்கப்படுகிறது.

வாயு விலகினாலும் அதன் தாக்கம் மூட்டுகளில் விட்டுச் செல்லப்பட்டிருப்பதால், மூட்டுப் பகுதியை வலுப்படுத்தும் விதமாக ஆயுர்வேத மூலிகைத் தைலமாகிய பிண்ட தைலத்தையும் முரி வெண்ணெயையும் சிறிது கலந்து, இரும்புக் கரண்டியில் சூடாக்கி, பஞ்சில் தோய்த்து, முழங்காலின் மீது வைத்து, ஒரு துணியில் அப்பகுதியைக் கட்டி வைக்கவும். வெதுவெதுப்பாக அப்பகுதி இருப்பதற்காக, காற்று வரும் மின்விசிறிகளுக்கு கீழ் இருப்பதைத் தவிர்க்கவும் 3/4 –1 மணி நேரம் வரை வைத்திருந்து, அதன் பிறகு பஞ்சை எடுத்துவிட்டு, அப்பகுதியை ஒரு துணியால் துடைத்துவிட வேண்டும். இந்தச் சிகிச்சை முறையும் சுமார் 21 – 48 நாட்களுக்குத் தொடர்ந்து செய்யலாம். காலை உணவுக்கு முன்பாகச் செய்து கொள்வது நலம். மூட்டுகளில் தேவையான எண்ணெய்ப் பசை உருவாக்கித் தந்து, அங்கு ஏற்படும் சத்தத்தை நீக்குவதையும் இந்த எண்ணெய் சிகிச்சை ஏற்படுத்தித் தரும். அடுத்த 21 நாட்களுக்கு இதே எண்ணெய் வகைகளைப் புதிதாக வாங்கி, மூட்டுகளின் கீழ் ஒரு பேசின் வைத்து எண்ணெய்களை வெதுவெதுப்பாக மூட்டின் மீது தாரையாக விழும்படி விடவும். சுமார் 8 –12 அங்குலம் மேலிருந்து விடலாம். இதையும் காலை உணவுக்கு முன்பாகவே விடவும். இது ஒரு சிறந்த வலி நிவாரணி சிகிச்சை மட்டுமல்ல, தேவையான நெய்ப்பையும், மூட்டுகளுக்கு ஏற்படுத்தித் தரும்.

கீழே கால்மடக்கி அமர்ந்து மலம் கழிக்கும் கழிவறையைப் பயன்படுத்த வேண்டாம். மேலே அமர்ந்து போகும் கழிவறைகளினால் கால் முழங்கால் மூட்டுகளுக்கான அழுத்தத்தைக் குறைக்கலாம். ஒரே இடத்தில் நிறைய நேரம் அமர்ந்திருப்பதையும், குளிர்ந்த நீரை குளிப்பதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்தவும் வேண்டாம். பலாகுடூச்யாதி எனும் ஆயுர்வேத கஷாய மருந்தை 15 மி.லீ. எடுத்து 60 மி.லீ. வெதுவெதுப்பான தண்ணீருடன் கலந்து காலை, மாலை வெறும் வயிற்றில் சுமார் 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டுவர பலன் கிடைக்கும்.

# கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு இங்கிருந்தும் இந்தியாவில் இருந்தும் பத்தாயிரம் வரையான யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கச்சதீவு பங்குத்தந்தை அருட்திரு ஏ.அமல்ராஜ் மேற்கொண்டுள்ளார். யாழ்.மாவட்டச் செயலகம், ஆளுநர் அலுவலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலகம், நெடுந்தீவு பிரதேச சபை, பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர் இணைந்து இவ்விழா ஒழுங்கினை மேற்கொண்டுள்ளனர். யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் குடிநீர், மலசல கூடம், சுகாதாரம், அவசர மருத்துவம் உட்பட ஏனைய விடயங்க்ளிலும் இலங்கை கடற்படையினரும் மாவட்ட அரச உத்தியோகத்தர்களும் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இங்கிருந்து செல்லும் யாத்திரிகர்கள் நாளை தொடக்கம் 24ஆம் திகதி வரை கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ளமுடியும். 23ஆம் திகதி பயணம் செய்யும் இலங்கை இந்திய யாத்திரிகர்கள் விரும்பு மிடத்து இரவு அங்கு தங்கி நின்று 24ஆம் திகதி காலை திருவிழாவில் பங்குபற்றவும் முடியும். இங்கிருந்து செல்லும் யாத்திரிகர்கள் குறிகாட்டுவான், நெடுந்தீவு துறைகளுடாக கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ளமுடியும். குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்கு செல்ல 300ரூபாவும் நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குச் செல்ல 200ரூபாவும் ஒரு வழி படகுக் கட்டணமாக அற விடப்படும். யாத்திரிகர்கள் தங்களுக்குரிய உணவினை தாமே எடுத்துவர வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள். அவர்கள் கடந்தமுறை போன்று குறித்த தீவின் தென்மேற்கு திசையில் உள்ள அதே இறங்கு துறையில் இறங்க அனுமதிக்கப் பட்டுவார்கள். யாத்திரிகர்கள் தங்களுடன் பொலித்தீன், பிளாஸ ரிக் பாவனைப் பொருட்களை எடுத்து வருதல் தடைசெய்யப்பட்டுள்ளது. கச்சதீவில் உணவு கொள் முதலுக்காக ப.நோ.கூ. சங்க கிளைகள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாத்திரிகர்களுக்காக குடிநீர், மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேவை கருதி இலங்கை வங்கி, பொலிஸ் நிலையம், சுங்கத்திணைக்களம் ஆகியவற்றின் சேவையும் பெறப் பட்டுள்ளது. அவசர தேவை கருதி கியூமெடிக்கா நிறுவனத்தின் அன்புலன்ஸ் படகுச் சேவையும் இடம்பெறும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## அச்சுவேலி பிரதேசத்தில் திருடர்கள் அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பிரதேசத்தில் அண்மைய நாட்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பிரதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் அச்சுவேலிப் பகுதியில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியினை பார்வையிடச் சென்றிருந்த அச்சுவேலி, தோப்பு பிரதேசத்தைச் சேர்ந்த பெற்றோர் ஒருவரின் துவிச்சக்கரவண்டி ஒன்று பாடசாலைப் பகுதியில் இருந்து மிகவும் இலாவகமான முறையில் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை சில தினங்களின் பின்னர் அச்சுவேலி மீனாட்சி அம்மன் கோயில்ப் பகுதியில் உள்ள வீடொன்றில் பகல் வேளையில் வீட்டார் வெளியே சென்றிருந்த நேரத்தில், தருணம் பார்த்து யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அறையினுள் இருந்த மடிக்கணனியொன்றினை திருடிச் சென்றுள்ளனர். இச் சம்பவங்கள் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் உரியவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததையடுத்து, பொலிஸார் இது தொடர்பான முறைப்பாட்டினைப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## சனசமூகநிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

கந்தரோடை துர்க்கா சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் சன சமூக நிலையத்தில் நடை பெறறது. இதில் புதிய தலைவராக கிருஷ்ணன் செல்வரத்தினம், செயலாளராக சின்னத்துரை சுமேந்தன், பொருளாளராக சந்திரமோகன் அஜித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.வலிகாமம் வலய இணைப்பாளர் ஜீவன், ஈ.பி.டி.பி.வலி.வடக்கு அமைப்பாளர் அன்பு மற்றும் ஈ.பி.டி.பி.வலி.வடக்கு இணை அமைப்பாளர் வள்ளுவன், இப் பகுதி கிராம சேவகர் சிவநாதன், வல்.தெற்குபிரதேச சபை உறுப்பினர் தேவராஜன், யாதவன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது வலிகாமம் வலய இணைப்பாளர் ஜீவன் இவ் ஆண்டு பன்முகப்படுத்தப் பட்ட நிதியில் சனசமூகநிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக உறுதியளித்தார். (95)

## பரமர் சங்கமம்



'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்னும் கேள்வியே உண்மையைச் சொல்லிவிடுகிறது. எல்லாம் இளமையில், இளவயதில் தோன்ற வேண்டும், செய்யவும் வேண்டும்.

'இளமையிற் கல' என்பதற்கேற்ப எதனையும் இளமையிலேயே பசுமரத் தாணியென இறுக்கிப் பதித்துக் கொள்ள முடியும்.

முதியவருக்கான கல்வி வகுப்புக்கள் நடத்தப்படுவதையும் கண்டோம், ஆயினும் அவர்களெல்லாம் பெரிதாகப் படித்துச் சாதித்து விட்ட தரவுகள் எதனும் கிடைத்ததா?

'இலவுகாத்தகிளி' விழலுக்கு இறைந்த நீராகினதே மிச்சம். காலம் என்னவோ கலி காலம்தான், அதற்காக எமது பிள்ளைகள் இளவயதினா செய்யும் காரியங்களையும், சொற்களையும் தூரவீசி விடுவது சரியா?

'சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்துசேராது' எனக் கூறியே மூத்தவர்கள் இளைய சமுதாயத்தின் முயற்சிகளைக் காயடித்துக்கொண்டிருப்பது புத்தி சாலித் தனமாகத் தெரியவில்லை.

'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' எண்டால் எங்களால் கற்கக் கூடியதை மட்டுந்தானே எங்கட மூளை எடுத்துக் கொள்ளும். என்ரை மூளேல ஏறாதது என்ரை மனிசீன்ர மூளேல ஏறலாம்.

எங்கள் ரெண்டு பேருக்கும் தெரியாத எத்தனையோ விசயங்கள் இந்தப் பரந்த உல்கில் இல்லாமலா போய் விடுகிறது?

அதனை எங்கடை ஐந்து பிள்ளைகள் இருந்தால் ஐந்து வகைளில் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறே உலகம் பூராகவும் சிந்திக்கத் தெரிந்த மனிதனின் செயற்பாடுகள் வியாபித்து வளர்ந்து கொண்டிருக்கின்றன.

எங்கடை அறிவுக்கு எட்டாத விடயமொன்றை பிள்ளையள் செய்ய முயலேக்க, அது பிழை அப்புடி எங்கட ஆருமே செய்ததேயில்ல எண்டு தடுப்பதைப்பல விடயங்களில் காணக், கேக்கக்கூடியதாக உள்ளது.

எங்கட அறிவுக்கும், சிந்தனைக்கும் அப்பால் எதுவும் நடந்துவிடக் கூடாதெண்ட அடிமட்ட மூடத்தனமல்லவா அது எண்டதை எப்போதாவது சிந்தித்து இருக்கிறோமா?

எமது பாரம்பரியம், பழக்கவழக்கமெண்டே கட்டுப்பெட்டித் தனத்தை எங்கடை பிள்ளைகள் ஊடாகப் பரம்பரைக்கே முன்னேற்றம் அடைய முடியாத படுகுழியைத் தோண்டி விட்டுள்ளோம்.

காலங்கள் எப்போதும் ஒரே மாதிரி இருந்து விடாது, மாற்றங்களை அடைந்து ஓடிக் கொண்டிருக்கும் என்னும் 'கார் மாக்ஸ' சிந்தனையை நுகர்வுக்கு உட்படுத்தியோரால் பழமை வாதிகளின் வாழ்வியலும் மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது.

சிறுவயதில் கண்ட எமது யாழ்ப்பாணக் கிராமங்களை இப்பொழுதெல்லாம் பார்க்க முடிவதில்லை. முப்பதாண்டு பின்னடைவை கால வெள்ளம் உடைத்துக் கொண்டோடுவதை தடுத்து விட முடியாது.

மண்டைதீவு போன்ற பின்னடைவேற்பட்டுக் கிடக்கும் இடங்களிலெல்லாம் எதிர்காலங்களில் கேளிக்கை விடுதிகளும், உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் காட்சிப் படுத்தல்களும் தோன்றப் போவதாகச் செய்திகள் கூறுகின்றன.

மூடி, மூடி வைத்தாலும் மாற்றம் அடையும் புதுமை உலகை மூடத் தான் முடியுமா சொல்லுங்க பாப்பம்...



குருநகர் ஐந்து மாடிக் கட்டடத்திற்கு எதிரில் இயங்கி வரும் வலைத் தொழிற்சாலைக்கு அண் மையில் விஜயம் செய்த மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அத்தொழிற் சாலைகளின் தொழிற்பாடுகளை நேரில் பார்வையிட்டு, அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதையும், மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி, தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் சபையின் பிரதான உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிற்பதையும் காணலாம்.

## முரசின் இன்றைய பலன்

(20.02.2013 – புதன்கிழமை)

நந்தன வருஷம் மாசி மாதம் 08 ஆம் திகதி. நட்சத்திரம் மிருகசீரிடம் மாலை 06.19 வரை. திதி தசமி முன்னிரவு 09.11 வரை. இராகுகாலம் 12.31 - 02.01 வரை. சுபநேரம் 05.01 - 06.31 வரை. சித்தம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்களில் மதிநுட்பம். வளம் பெற புதிய வாய்ப்பு வரும். தொழில் செழிக்கும். உபரி வருமானம். வெகு நாள் தேடிய பொருள் கைவந்து சேரும். கடன் தீரும். உயர்வு. |
| ரிஷபம் | புதிதாக உருவாகிற அவசரப்பணி, கஷ்டத்தை தரும். நண்பர் உதவுவார். தொழில், முயற்சிக்கு வெற்றி. அளவான பணவரவு. வெளியுலக தொடர்புகள் விரிவடையும். பெருமை. |
| மிதுனம் | எண்ணத்தில் உற்சாகம், செயல்களில் புதிய பரிமளிப்பு. தொழில், கடும் உழைப்பு. எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம். உடன்பிறந்தவர்களுக்கு உதவி. வெற்றியும் பாராட்டும். |
| கடகம் | பயம் இருக்கும். பொது விவகாரங்களில் நுழைவதை தவிருங்கள். தொழில், தொந்தரவு தரலாம். வரவு குறைவு. சிக்கனம் நல்லது. உணவில் கவனம். வாகன பயணத்தில் கவனம். |
| சிம்மம் | கூடுதல் வேலைப்பளு. பேச்சைக் குறைக்க பகை விலகும். புதிய யுக்தியில் தொழில் வளர்ச்சி. அளவான வரவு. அரச தொடர்பில் அலைச்சல். சகோதர சண்டை 'வரும். அவதானம். |
| கன்னி | மனதில் ஒருமுகத் தன்மை. நண்பர், உறவினர்களிடம் அன்பு, பாசம். தொழில் வளர்ச்சி. பணவரவு திருப்தி. விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். தீராத பிரச்சினை ஒன்று தீரும். |
| துலாம் | மனதில் உற்சாகம். நண்பரிடமிருந்து உதவி. தொழில், கூடுதல் பணி. உபரி வருமானம். குடும்பத்தில் மங்கல நிகழ்வு. கடின வேலைகளும் சுமுகமாக முடிவடையும். புத்துணர்ச்சி. |
| விருச்சிகம் | எதிர்மனப்பாங்குள்ளவரிடம் விலகுவது நல்லது. செயல்களில் தாமதம். தொழில், அதிக பணி. எதிர் பார்த்த பணவரவு கிடைக்கும். குடும்ப ஆதரவால் மகிழ்வு. வெளியூர்ப் பயணம். |
| தனுசு | மனதில் இருந்த குழப்பநிலை சரியாகும். முன் செய்த நற்செயலுக்கு பலன் வரும். தொழில், அபிவிருத்தி. குடும்பத் தேவைக்கு தாராள செலவு. தெய்வ நினைவு. மனதில் பலம். |
| மகரம் | சிலரது அறிவுரை, தர்மசங்கடத்தை உருவாக்கும். புதிய முயற்சிகளை ஒத்திப்போடுக. தொழில், மந்தம். முக்கிய செலவு வரும். அரச உதவி. புது சந்திப்பு. சமூகத்தில் மதிப்பு வரும். |
| கும்பம் | நலம் விரும்புவோரின் ஆலோசனை உதவும். தொழில், சிரமம் விலகும். சராசரி பணவரவு. புதிய இனங்களில் செலவு. உத்தியோகத்தில் அனுகூலம். பொறுமையால் வெல்வீர்கள். |
| மீனம் | செயல்களில் மனப்பூர்வ ஈடுபாடு காட்டுவீர்கள். வெகு நாள் எதிர்பார்த்தது வரும். தொழில், திட்டமிட்ட இலக்கு பூர்த்தி. உபரி வருமானம். தாய் வழியில் உதவி. ஒய்வும் மகிழ்வும். |

**09) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய் பயனிலைச் சொற்களை எழுதுக.**

1) பசு புல் மேயும்.

2) குழந்தை சிரித்தது.

3) பூனை எலி பிடிக்கும்.

4) கண்ணன் நடனம் ஆடினான்.

5) மழை பெய்தது.

| எழுவாய் | பயனிலை |
|---|---|
| 1) ........................ | ........................ |
| 2) ........................ | ........................ |
| 3) ........................ | ........................ |
| 4) ........................ | ........................ |
| 5) ........................ | ........................ |


**10) பின்வரும் சிங்களச் சொற்களை தமிழில் எழுதுக.**

1) பன்சல : .................................. 2) ஆப்ப : ..................................

3) அரலிய: .................................. 4) மல்லி : ..................................

**11) பின்வரும் படத்தைப் பார்த்து மூன்று வாக்கியங்கள் எழுதுக.**

**(ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களேனும் இருத்தல் வேண்டும்)**



1) ..............................................................................................................

2) ..............................................................................................................

3) ..............................................................................................................



தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2013

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) ஏழைகளுக்கு இரங்குவோம் இதில் "ஏழை" என்பதன் ஒத்தசொல் எது?

1) பிச்சைக்காரர் 2) வறியவர் 3) திக்கற்றவர்

2) பின்வரும் கவிதையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

............................ போவோம்
பணத்தைச் சேமிப்போம்
தேவைகளைப் பூர்த்தி செய்வோம்
சிக்கனமாய் வாழ்வோம்

1) பாடசாலைக்குப் 2) வங்கிக்குப் 3) நூலகம்

3) திருவள்ளுவரை அழைக்கும் வேறு பெயராக அமையாதது

1) தெய்வப்புலவர் 2) கவிச்சக்கரவர்த்தி 3) பொய்யாமொழிப்புலவர்

4) பாட்டி எந்த மரத்தின் கீழிருந்து வடை சுட்டு விற்றாள்?

1) ஆலமரம் 2) வேப்பமரம் 3) மதுரை மரம்

5) பின்வரும் கவிதையில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

**வானம் கறுத்தால் மழை பெய்யும்**
**மழை பெய்தால் மண் குளிரும்**
**மண் குளிர்ந்தால் புல் தழைக்கும்**
**புல் தழைத்தால் ................ மேயும்**

**1) ஆடு 2) மாடு 3) பசு**

6) எப்போதும் ஒருமை, பன்மை என்பவற்றுக்குப் பொதுவாகப் பயன்படுத்தும் சொற்கள் மூன்று தருக.

1) நீர் போல 1) 2) 3)

7) மோகனின் வீட்டில் கிணற்றுக்கு கிழக்குப் பக்கம் காணப்படுவது எது?

1) கமுகு மரங்கள் 2) வாழைத்தோட்டம் 3) மாமரங்கள்

8) இதயம் : உதயம் என்பது போல, நட்டம் : ..........................

1) இலாபம் 2) விரயம் 3) வட்டம்

02) ஒத்தகருத்தைத் தரும் இரண்டு சொற்கள் வீதம் எழுதுக.

1) சந்திரன் 1) ........................ 2) ........................

2) உண்மை 1) ........................ 2) ........................

3) புத்தகம் 1) ........................ 2) ........................

4) காடு 1) ........................ 2) ........................

5) வீடு 1) ........................ 2) ........................

03) நீண்ட ஓசைச் சொற்களாக்கி எழுதுங்கள்.

1) சுடு ........................ 6) குடம் ........................

2) எடு ........................ 7) கொடு ........................

3) குடை ........................ 8) மடி ........................

4) வடை ........................ 9) கல் ........................

04) பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்.

| ஒருமைச்சொல் | பன்மைச்சொல் |
|---|---|
| 1) குமிழி | ........................ |
| 2) ........................ | பூக்கள் |
| 3) அலை | ........................ |
| 4) ........................ | செடிகள் |
| 5) விளிம்பு | ........................ |

05) எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குங்கள்.

1) வெ, ம், ள, ள் :........................ 5) ம், ப, ம், வி :........................

2) யா, தி, ந், இ :........................ 6) ல், த், போ, த :........................

3) சா, யி, வி, வ :........................ 7) பு, ம், வி, ளி :........................

4) சா, ட, லை, பா :........................ 8) ந, ச, த், ட், தி, ம், ர :........................



06) பின்வரும் கவிதையை வாசித்து விடை எழுதுக.

வண்ணக் கிளிபோல பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை!
கடலில் மீனாய் நீந்திட ஆசை!

1) "வண்ணக்கிளி" என்பதைப் பிரித்து எழுதுக. ........................

2) "அம்புலி" என்பதன் ஒத்தசொல் எது? ........................

3) "இச்சை" என்பதன் ஒத்தசொல் எது? ........................

4) கவிதையில் வரும் பிராணிகள் எவை? ........................

5) "இருள்" என்பதன் எதிர்ச்சொல் எது? ........................

6) "சாகரம் " என்பதன் ஒத்தசொல் எது? ........................

7) "மடல்" என்பதன் ஒத்து ஒலிக்கும் சொல் எது? ........................

07) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி வசனமாக்குக.

1) உள்ள / கழுகுகள் / பார் / இடத்தைப் / அதோ

........................

2) விரைவில் / வருவேன் / வீட்டிற்கு / நான்

........................

3) மீது / கருணை / காட்டுவோம் / நாம் / உயிர்கள்

........................

4) நூலகம் / நாம் / சென்று / நல்ல / படிப்போம் / நூல்களைப்

08) பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்.

| சொல் | ஒத்தகருத்துள்ள சொல் | எதிர்க்கருத்துள்ள சொல் |
|---|---|---|
| 1) தூய்மை | ........................ | ........................ |
| 2) வெப்பம் | ........................ | ........................ |
| 3) உவகை | ........................ | ........................ |
| 4) மெய் | ........................ | ........................ |
| 5) வாசம் | ........................ | ........................ |

# தூக்கு விதிக்கப்பட்ட நால்வருக்கும் எனது கணவருக்கும் தொடர்பில்லை

வீரப்பன் கூட்டாளிகளுக்கு எதிரான தூக்குத் தண்டனையை நிறுத்தக் கோரி தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கோரிக்கை விடுத்துள்ளார்.

வீரப்பன் தேடுதல் வேட்டையின் போது பொலிஸ்காரர்கள் இறந்த வழக்கில் 4 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவர்கள் 4 பேரும் தமிழர்கள், இவர்களுக்கும் எனது கணவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

ஆனால், சந்தேகத்தின் பேரில் இவர்களைப் பொலிஸார கைது செய்துள்ளனர். கோபாலகிருஷ்ணன் என்ற பொலிஸ் அதிகாரி அளித்த ஒரே சாட்சியத்தின் பேரில் இவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரி சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியது போல, இவர்கள் 4 பேரின் தண்டனையையும் நிறுத்திவைக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என முத்துலட்மி கோரியுள்ளார்.



இந்தியச் செய்திகள்

## கிறிஸ்தவ நற்சிந்தனை

# அருளின் காலம்

யோனா நினிவே பட்டணத்திற்குள் சென்று, "இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று அறிவித்தார். நாம் பாவத்தை அழிக்க வேண்டும், அல்லது பாவம் நம்மை அழித்துவிடும். இதுதான் யோனா இன்று எமக்குத் தரும் செய்தி.


கடவுள் அன்பே மயமானவர். மனம் திரும்புதலுக்கான அழைப்பு அவரது அன்பின் அழைப்பு.

ஊதாரி மகனின் உவமை சொல்வதுபோல் தன் மகன் திரும்ப வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தந்தை அவர். அவரது இந்த அழைப்புக்கு நாம் பதில் தராவிட்டால் பாவம் நமது கலகத்தன்மையைக் கொண்டே நம்மை அழித்துவிடும்.

இந்தத் தவக்காலம் அருளின் காலம் என்பதை நாம் மறந்து விட வேண்டாம்.

எங்கள் வழிகளில் இருந்து விடுபட இது மற்றுமொரு தருணம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். எம்மிடம் உண்டாகும் மனமாற்றம் கடவுளின் மனதை மாற்றும். இதுதான் யோனாவின் கதை சொல்லும் பாடம்.

-வி.பி.தனேந்திரா.




# தமிழகத்திற்கு இனி தண்ணீர் கிடையாது

## மீண்டும் அடம்பிடிக்கும் கர்நாடகா



தமிழகத்திற்கு காவிரியில் இருந்து மேலும் தண்ணீர் திறந்துவிட முடியாது என கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருந்தபோதிலும், உச்ச நீதிமன்ற உத்தரவை மதித்தே காவிரியில் இருந்து ஏற்கனவே தண்ணீர் திறந்து விடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக்கூடாது என்பதை வலியுறுத்தும் நோக்கில், கர்நாடக முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் தலைமையிலான அனைத்துக் கட்சி குழுவினர் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கின்றனர்.

கர்நாடகாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அமைச்சர்கள் மற்றும் எதிர்க் கட்சித்தலைவர்கள் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இதன்போது, மாநிலத்தில் வறட்சியும் குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவி வரும் நிலையில், இத்தகைய முயற்சியை மத்திய அரசு மேற்கொள்ளக்கூடாது என வலியுறுத்தப் போவதாக முதலமைச்சர் ஜெகதீஷ் ஷெட்டர் தெரிவித்துள்ளார்.

காவிரி நடுவர மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேணடும் என்று மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தர விட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அப்சல் குருவின் சடலம் ஒப்படைக்க அரசு மறுப்பு?



அப்சல் குருவின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் விடுத்த கோரிக்கையை மத்திய அரசு நிராகரிக்க உள்ளது.

நாடாளுமன்ற தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்ட அப்சல் குரு கடந்த 9ஆம் திகதி டில்லி திகார் சிறையில் தூக்கில் போடப்பட்டார். அவர் தூக்கில் போடப்படுவது மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அவரது சடலத்தை திகார் சிறை வளாகத்திலேயே அடக்கம் செய்துள்ளனர்.

இந்த நிலையில், அப்சல் குருவின் சடலத்தை தங்களிடம் ஒப்படைக்கும்படி அவரது குடும்பத்தினர் கோரிக்கை வைத்தனர். இது தொடர்பாக அப்சல் குருவின் மனைவி தபஸ்சும் எழுதிய கடிதத்தை மத்திய அரசுக்கு காஷ்மீர் மாநில அரசு அனுப்பி வைத்துள்ளது. இந்தக் கடிதம் தற்போது மத்திய உள்துறையின் பரிசீலனையில் உள்ளது. சடலத்தை தோண்டி எடுத்து குடும்பத்தினரிடம் ஒப்படைப்பது பற்றி உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். சடலத்தை குடும்பத்தினரிடம் ஒப்படைத்தால் தேவையற்ற சர்ச்சைகள் உருவாகும் என்று அவர்கள் அரசுக்கு பரிந்துரைத்துள்ளனர்.


## முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெயர்: த.தர்ஷியா

வட்டாரம் – 8,

நயினாதீவு

அகவை 04இல்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


யாருக்குத்...

(12ஆம் பக்கத்தொடர்ச்சி...)

அதன் முகத்தை உற்று நோக்கியபடி, 'பாவம் பாவம் ராஜா' என்றாள். பின்னர் குனிந்து குழந்தையின் நெற்றியிலும் பிஞ்சுக் கால்களிலும் முத்தமிட்டாள். இதற்குள் அந்தப்பெண் கழுதையின் மேல் ஏறிவிட்டிருந்தாள். விடுதித் தலைவி குழந்தையை அவள் கையில் திரும்பிக் கொடுத்தாள். அவள் மீண்டும் அதை மார்போடு அணைத்துக் கொண்டாள். வீட்டில் உள்ளேயிருந்து மூன்று நான்கு பெண்கள் இருட்டில் நிசப்தமாக வெளியே வந்தனர். கழுதையின் மூக்குக் கயிற்றை அந்த ஆண் பிடித்திருந்தான். கழுதை மேல் இருந்த பெண் எல்லோரையும் பார்த்துக் கூறினாள்: 'அடைக்கலம் தந்ததற்கு எங்கள் நன்றி. என் குழந்தையின் நன்றி. உங்களுக்கு எந்தப் பிரதி உபகாரமும் எங்களால் செய்யமுடியவில்லை.'

விடுதியின் தலைவி கூறினாள்: 'உன் மகன் வளர்ந்து ராஜாவாகும்போது எங்களையும் ரட்சிக்கும்படி சொல். நாங்கள் தாசிகள்தான். ஆனால் அம்மா சொல்வதை அவன் கேட்பான்.'

கோவேறு கழுதை நடக்க ஆரம்பித்தது. விடுதித் தலைவி முன்னால் விரைந்து வந்து சொன்னாள்: 'அந்தப் படை வீரனையும்... உங்களுக்கு நல்லதே நடக்கட்டும்.' வீதியின் இடைவெளியில் திரும்பி ஆணும் கோவேறு கழுதையும் தாயும் குழந்தையும் இருட்டில் மறைந்தனர். வேசிகள் படைவீரனைக் கடந்து உள்ளே செல்லும் போது, அவன் உறக்கத்தில் முணுமுணுத்துக் கொண்டிருந்தான்: 'வெண்ணீர் தயாராகிவிட்டதா?'


## முரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர்: க.சுவிற்றி

ஆம் வட்டாரம்,


நெடுந்தீவு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

அகவை 03இல்

# பாக். துறைமுகம் சீனா வசம்;

# இந்தியா கடும் அதிர்ச்சி



இதுநாள் வரை சிங்கப்பூர் வசம் இருந்த, பாகிஸ்தான் கவ்தார் துறைமுகத்தை சீனா தனது பொறுப்பில் எடுத்துள்ளது.

இங்கு தனது கடற்படைத் தளத்தை அமைக்கவும் சீனா திட்டமிட்டுள்ளது. இதனால் இந்தியா கடும் எரிச்சலும், அதிர்ச்சியும் அடைந்துள்ளதாக தெரிவிக கப்படுகின்றது.

இந்தியாவைச் சுற்றி வளைக்கும் சீனாவின் பூமாலைத் திட்டத்தின் கீழ்தான் இந்த துறைமுகத்தை சீனா கையில் எடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

இந்தியாவைச் சுற்றிலும் சீனா தனது நிலைகளைப் பலப்படுத்தி வருகிறது. இதுகுறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி கூறுகையில்;

முறைப்படி கவ்தார் துறைமுகம் சீனாவிடம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான ஒப்பந்தம் சிங்கப்பூர் நிறுவனத்திற்கும், சீன வெளிநாட்டு துறைமுகங்கள் பொறுப்புக் கம்பெனிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

எரிபொருள் மற்றும் வர்த்தக போக்குவரத்திற்காகவே இந்த துறைமுகத்தை ஒப்பந்த அடிப்படையில் வாங்கியுள்ளதாக சீனா கூறினாலும் கூட, இங்கு அது தனது கடற்படையை நிறுத்தப் போவதாக கூறப்படுகிறது என இந்திய ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

## உலகச் செய்திகள்

# சீனபள்ளிச் சீருடையில் புற்றுநோயை ஏற்படுத்தும் சாயம்




சீனாவில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைத் துணிகளில் நச்சுத் தன்மையுள்ள சாயம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக புகார் எழுந்ததையடுத்து, அந்தச் சீருடைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

ஹாங்காய் நகரத்தில் செயல்படும் துணி தயாரிப்பு நிறுவனங்களில், மாநகராட்சியை சேர்ந்த தரம் மற்றும் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவினர், தரஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட போது, ஆக்ஸியா என்ற ஆடைகள் தயாரிப்பு நிறுவனத்தில் தயாரிக்கப்படும் துணிகளை ஆய்வ் செய்தனர்.

அப்போது சாயம் ஏற்றுவதற்காக தடைசெய்யப்பட்ட இரசாயனம் பயன்படுத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

# ஒபாமா விடுதியின் வான்பரப்பில் அத்துமீறி நுழைந்த விமானங்கள்



அமெரிக்க அதிபர் ஒபாமா புளோரிடாவில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஓய்வு விடுதிக்கு அருகாமையில் உள்ள வான்வெளியில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடையை மீறி செஸ்னா-152 விமானம் ஒன்று ஒபாமாவின் ஓய்வு விடுதி அருகே உள்ள வான்வழிப் பாதையில் அத்துமீறி நுழைந்தது பாதுகாப்பு அதிகாரிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. உடனடியாக சுதாரித்துக் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள், வட அமெரிக்க விமானப்படை தளத்திற்கு தகவல் அளித்தனர்.

அங்கிருந்து மின்னல் வேகத்தில் சீறிப் பாய்ந்த எப்-16 ரக போர் விமானம் அத்துமீறி பறந்த விமானத்தை விரட்டிச் சென்றது. போர் விமானத்திற்கு துணையாக கடற்படையை சேர்ந்த ஹெலிகாப்டர்களும் இணைந்துக் கொண்டன. போர் விமானத்தால் விரட்டப்படுவதை கவனித்து விட்ட அத்துமீறிய விமானத்தின் விமானி, ஸ்டுவார்ட்டில் உள்ள வித்தாம் பீல்ட் விமான தளத்தில் விமானத்தை அவசரமாக தரையிறக்கினார். அவரைச் சுற்றி வளைத்த இரகசிய பொலிஸார் மற்றும் விமான போக்குவரத்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இச்சம்பவம் நிகழ்ந்த 5 மணி நேரத்திற்கு பின்னர், இன்னொரு லேன்கேர்-320 ரக சிறிய விமானம் ஒன்று தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நுழைந்தது. அந்த விமானத்தையும் போர் விமானம் விரட்டிச் சென்று சேருமிடம் வரை பின் தொடர்ந்து, பின்னர் திரும்பி வந்தது.

# புற்றுநோய் சிகிச்சை முடிந்து நாடு திரும்பிய சாவேஸ்



புற்றுநோய் அறுவை சிகிச்சை முடிந்து, வெனிசூலா அதிபர் ஹியூகோ சாவேஸ் கடந்த திங்கட்கிழமை வீடு திரும்பினார். புற்று நோய் பாதிப்புக்குள்ளான சாவேஸ் (வயது-58), கடந்த டிசம்பரிலிருந்து கியூபாவில் சிகிச்சை பெற்றுவந்தார். அவர் தற்போது நாடு திரும்பியுள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் சமூக இணையதளத்தில் எழுதியிருப்பதாவது; எனது தாய் நாட்டுக்குத் திரும்பிவந்து விட்டேன். நன்றி கடவுளே! நன்றி என் அன்புக்குரிய மக்களே! இனி சிகிச்சையை இங்கு தொடர்வேன் எனக் குறிப்பிட்டுள்ளார். சாவேஸ், விமான நிலையத்தில் இருந்து கார்லோஸ் அவரெல்லா இராணுவ மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது என்று சாவேஸின் மருமகனும், அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சருமான ஜார்ஜ் அர்ரியாஸா தெரிவித்தார். வெனிசூலாவின் அதிபராக கடந்த 14 ஆண்டுகளாக சாவேஸ் பதவி வகித்து வருகிறார். நாடு திரும்பியுள்ள சாவேஸ் உடனடியாக நிர்வாகப் பொறுப்பை ஏற்பாரா என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை.

# இரு கைகளும் இன்றி விமானம் ஓட்டிய பெண்





சாதாரண மனிதர்களே சாதிக்க சிரமப்படும் வேலையில் இரு கைகளும் இன்றி விமானம் ஓட்டுவது உட்பட பல சாதனைகளை அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பெண் நிகழ்த்தியுள்ளார்.

அமெரிக்காவின் அரிசோனா மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு பிறந்தவர் பெண் ஜெசிகா காக்ஸ். பிறவியிலேயே இரு தோள் பட்டைகளுக்கு வெளியே கைகள் இல்லாத நிலையில் பிறந்த இவர், வாழ்வில் சாதனைகள் படைப்பதற்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதை பல வகைகளில் நிரூபித்துள்ளார்.

14 வயதானபோது டைப்ரைட்டரில் கால் விரல்களால் நிமிடத்திற்கு 25 வார்த்தைகள் டைப் செய்து அசத்திய ஜெசிகா, கால்களால் காரை ஓட்டிக் காட்டி முறையான ஓட்டுநர் உரிமத்தைப் பெற்றார்.

தற்காப்பு கலையான டேக்வாண்டோவில் கறுப்பு பெல்ட்டை பெற்றுள்ள இவர், நீர் சறுக்கு விளையாட்டு உள்ளிட்ட எல்லா விளையாட்டுகளையும் கால்களால் மட்டுமே விளையாடி சராசரி மனிதர்களை வியப்புக்குள் ஆழ்த்தியுள்ளார்.

இவரது தன்னம்பிக்கையையும், விடா முயற்சியையும் பற்றி அறிந்த 16ஆம் போப் பெனடிக்ட், ஜெசிகாவை வாட்டிகன் அரண்மனைக்கு வரவழைத்து பாராட்டி ஆசி வழங்கியுள்ளார்.

எல்லாவற்றையும் விட, உச்சகட்ட சாதனையாக குறைந்த எடையுள்ள விமானத்தை கால்களால் இயக்கியபடியே 10 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து, உலக அளவில் இந்த சாதனையை படைத்த ஒரே நபர் என்ற வகையில் கின்னஸ் புத்தகத்திலும் ஜெசிகா காக்ஸ் தனி இடம் பிடித்துள்ளார்.

# 3500 ஜோடிகளுக்கு திருமணம்; தென்கொரியாவில் கோலாகலம்

தென்கொரியாவில் சுமார் 3500 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ள மாபெரும் திருமண நிகழ்வு அரங்கேறியுள்ளது.

தலைநகர் சியோலில் இருந்து வட கிழக்கே அமைந்துள்ள கப்யெயோங் எனும் நகரில் திருமணம் நடந்த அதே நேரத்தில் மூனியெஸ் என அழைக்கப்படும் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்த வெளிநாட்டில் வாழும் 24000 பேர் வீடியோ இணைப்பு மூலம் திருமணம் செய்து கொண்டனர். மேலும் திருமண வைபவத்தில் தேவாலயத்தின் உறுப்பினர்கள் 400 பேரும் அடங்குவர்.

இத்தேவாலயம் மூலமாகப் பல ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் செய்து வைக்கும் சம்பிரதாயம் 1960ஆம் ஆண்டுகளிலேயே தொடங்கி விட்டது. 1997ஆம் ஆண்டு மட்டும் 30, 000 ஜோடிகள் வாஷிங்டனில் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். என்பது குறிப்பிடத்தக்கது.



# சிறுகைத்தொழில் முயற்சிகளை பாதுகாக்க நடவடிக்கை



அரசின் நலன்களுக்கு அமைவாக தொழிற்சாலைகளைப் பாதுகாக்கும் வகையில் அமைச்சின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , தெரிவித்துள்ளார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற பள்ளேகலப் பகுதியில் அமைந்துள்ள தொழிற்பேட்டையின் கீழான தொழிற்சாலைகளின் தொழில் அதிபர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழான தொழிற்பேட்டைகள் ஊடாக கைத் தொழில் துறையை மேம்படுத்தி விருத்தி செய்வதற்கு ஏற்றவகையில், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் அதேவேளை, தொழில் அதிபர்களால் முன்வைக் கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய அமைச்சரவைப் பத்திரம் மூலம் தீர்வு காண்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

அந்தவகையில், அரசினது நலன்களுக்கு அமைவாகவும் தொழிற்சாலைகளைப் பாதுகாக்கும் வகையிலும் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென்பதுடன், துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு உரிய கவனம் செலுத்தப்படும். அத்துடன் தொழிற்சாலைகளின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு வங்கிகள் ஊடாக இலகுகடன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் 2013 - 2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தொழிற்சாலைகள் ஊடாக வருவாயை மேம்படுத்தும் வகையில் துறைசார்ந்தோர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதனிடையே தொழில் அதிபர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பில் குறித்த தொழிற்பேட்டைகளுக்கு நேரில் விஜயம் மேற்கொண்டு ஆராயவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், தொழிற்பேட்டைகளுக்கான உட்கட்டுமாணப் பணிகள் தொடர்பிலும், அடிப்படைத் தேவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் அதேவேளை, முன்னுரிமை அடிப்படையில் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதில், பள்ளேகலப் பகுதியிலுள்ள 46 தொழிற்சாலைகளின் தொழில் அதிபர்களும், ஏனைய 17 கைத்தொழிற்பேட்டைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தமது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சருக்கு எடுத்து விளக்கினர்.

இதன்போது, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் உதயசிறி காரியவசம், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## விசேட அமர்வைக் கூட்டுவதற்கு கிழக்கு மாகாணசபை அங்கீகாரம்

மாகாணத்தில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது விசேட தேவை கருதி மாகாணசபையில் விசேட அமர்வை கூட்டுவதற்கு கிழக்கு மாகாணசபை அங்கீகாரம் அளித்துள்ளது. கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பையினால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைக்கே சபை ஏகமனதாக அங்கீகாரம் அளித்துள்ளது.

கிழக்கு மாகாணசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ஆரியவதி கலப்பதி தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த மாதாந்த அமர்வின் போது தனிநபர் பிரேரணை சம்பந்தமான குழுநிலை விவாதம் இடம்பெற்றது. மாகாணத்தில் அனர்த்தங்கள் ஏற்படும் போது விசேட தேவை எனக்கருதி மாகாணசபையின் தலைவியின் அனுமதியோடு விசேட சபை அமர்வை கூட்டுதல் வேண்டும் என்ற பிரேரணையை கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை சமர்ப்பித்தார். அந்த பிரேரணையை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. மாகாண சபை ஆரம்பித்து நான்கு வருடங்கள் சென்ற போதிலும், முதன் முறையாக இப்படி ஒரு பிரேரணையை அமைச்சர் உதுமாலெப்பை கொண்டுவந்தது மிகவும் வரவேற்கத்தக்கது என பிரேரணைக்கு ஆதரவளித்து பேசிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் இரா.துரைரட்ணம் குறிப்பிட்டார்.

### இனநல்லிணக்கத்தை...

காணக் கூடியதாக இருக்கின்றது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனவர்கள் தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்கான ஆணையாளர் ஒருவரை நியமித்தல் போன்ற விடயங்கள் கவனிக்கப்படவில்லை. இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை உரியவர்களிடம் கையளித்தல், ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள், இறந்தவர்கள், காணாமற் போனவர்களை நினைவு கூருதல், தேசிய மொழிப்பயன்பாடு போன்றவை உள்ளிட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பரிந்துரைகள் மீறப்பட்டிருப்பதையும் நேரில் நாங்கள் கண்டு வருகின்றோம் என்றும் கத்தோலிக்க மதகுருமார்கள் தமது கடிதத்தில் கூறியிருக்கின்றார்கள்.

கடந்த ஆண்டில், அமைதியான வழியில் அரசாங்கத்தை விமர்சித்தவர்கள் அல்லது அரசுக்கு சவால் விடுத்தவர்கள், ஐ.நாவுடன் தொடர்புகளை வைத்திருந்தவர்கள்கூட, இலங்கை அமைச்சர்கள், அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர். விசாரிக்கப்பட்டுள்ளனர், கைது செய்யப்பட்டுள்ளனர், அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அவமானப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட எங்களில் சில மதகுருமார், தாம் பழிவாங்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாக இந்தக் கடிதத்தில் கையெழுத்திட முன்வரவில்லை என்றும் அந்தக் கடிதம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் அக்கறை கொண்டுள்ள அதேவேளை, ஒட்டுமொத்த நாட்டில் அதிகரித்து வரும் சர்வாதிகாரத்தனம் குறித்தும் தாங்கள் கவலையடைந்திருப்பதாகவும் கத்தோலிக்க மதகுருமார்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

முஸ்லிம்களுக்கு எதிரான அண்மைக்கால தாக்குதல்கள், 27 சிங்கள கைதிகள் கொல்லப்பட்டமை, சித்திரவதை செய்து கொல்லப்பட்டதாக நம்பப்படுகின்ற மனித எச்சங்கள், மாத்தளை மனிதப் புதைகுழியில் கண்டு பிடிக்கப்பட்டமை, அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், மாணவர் தலைவர்கள், மதகுருமார் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள் குறித்தும் தாங்கள் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

### பிரபாகரனின்....

ஆதாரம் கிடைத்திருப்பதாக

சனல்-4 தொலைக்காட்சியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவரான காலம் மக்கரே தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் 12 வயது மகனான பாலச்சந்திரன் கொல்லப்படுவதற்கு முன்னரும், பின்னரும் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் இரு படங்களை அவர் வெளியிட்டிருக்கிறார்.

தமது நிபுணர்களின் ஆய்வுகளின்படி இந்த இரு படங்களும் ஒரே கமெராவில் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இன்னுமொரு படத்தில் அந்தச் சிறுவனைச் சுற்றி அவனது மெய்ப்பாதுகாவலர்கள் என்று நம்பப்படும் 5 பேர் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சுடப்பட்டுக் கிடப்பதும் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் படங்களின் மூலம், அந்தச் சிறுவன் மோதலில் இடையில் அகப்பட்டு இறக்கவில்லை என்பதும், அவர் பிடிக்கப்பட்டு, அதன் பின்னரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்பதும் தெரியவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகைப்படங்கள், தன்னுடைய கொலைக்களம் என்ற ஆவணப்பட தொடரில் அடுத்து வரவிருக்கும் 'பாதுகாப்பு வலயம்' என்னும் ஆவணப்படத்தில் இடம்பெற இருப்பதாகவும் கலம் மக்கரே கூறியுள்ளார்.

இந்தப் புதிய படங்கள் போர்க்குற்றங்கள் குறித்து மேலும் கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கத்தை பதிலளிக்கும் நிலைக்கு உள்ளாக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணப்பட ஆதாரங்கள் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வரவிருக்கும் தீர்மானத்தை ஆதரிப்பதற்கு இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கும் என்றும் அவர் இந்துப் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இதற்கிடையே இந்தக் குற்றச்சாட்டை இலங்கை இராணுவம் முற்றாக மறுத்திருக்கின்றது.

சாக்கு மூடைகளுக்கு இடையிலும், பின்னர் சடலமாக நிலத்திலும் பாலச்சந்திரன் இருக்கும் காட்சியில் எந்த விதமான உண்மையும் கிடையாது என்று இலங்கை இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார் என்று பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

### வடக்கில்....

பினர் பாலி ஓமாவகே மற்றும் இசா வில்லியம் ஆகியோர் நேற்று முற்பகல் யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்து யாழ்.அரச அதிபருடன் சந்திப்பில் ஈடுபட்டனர். இதன்போது யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இருவரையும் வரவேற்றதுடன், யாழ்.மாவட் டத்தில் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமாணப் பணிகள் மற்றும் 2012 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள், கட்டுமாணங்கள் குறித்து ஒளிப்படத் 'தொகுப்புடன் எடுத்து விளக்கினார்.

இதன்போது யுத்தத்திற்குப் பிந்தியதாக யாழ்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி மற்றும் கட்டுமாணங்கள் குறித்து திருப்தி தெரிவித்த அமெரிக்கப் பிரதிநிதிகள் தமது விஜயத்தின் போது இவ்வாறான நிலையை நேரடியாகத் தம்மால் அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவித்ததுடன், அதனையிட்டுத் தமது திருப்தியையும் தெரிவித்ததாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அரச அதிபருடனான சந்திப்பை முடித்துக்கொண்ட அமெரிக்கப் பிரதிநிதிகள் யாழ்.நகருக்கும் விஜயம் செய்து அங்குள்ள நிலைமையினையும் பார்வையிட்டதுடன், பிற்பகல் கொழும்பு திரும்பினர். ஏற்கனவே குறித்த ஒழுங்கின்படி அமெரிக்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மட்டக்களப்பு பகுதிக்கும் விஜயம் செய்திருந்தாகவும் மேலும் தெரியவருகின்றது.

(பா)

### கச்சதீவுக்கு...

குறிகாட்டுவானுக்கும், குறிகாட்டுவானிலிருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பித்து நெடுந்தீவு ஊடாக கச்சதீவுக்கும் இடம்பெறும்.

மீண்டும் குறிகாட்டுவானிலிருந்து மாலை 3.30 மணியளவில் நெடுந்தீவு ஊடாகக் கச்சதீவுக்கும் சேவையில் ஈடுபடும்.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு கச்சதீவிலிருந்து நெடுந்தீவுக்குச் சேவையில் ஈடுபடும் அதேவேளை தேவைக்கு ஏற்பவும் சேவையில் ஈடுபடும்.

10.00 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கும் பின்னர் தேவைக்கு ஏற்பஇடம்பெறும்.

தனியார் படகுச் சேவையானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி காலை முதல் நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குச் சேவையில் ஈடுபடும் ஒருவருக்கு ஒரு வழிக் கட்டணமாக 200 ரூபா அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கிளிநொச்சியில்...

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது மூன்று பிரதேசசபைகளும், 35 உறுப்பினர்களும் உள்ளனர். புதிய தேர்தல் முறையின் மூலம் கரைச்சிக்கு 21 வட்டாரங்களும், பச்சிலைப்பள்ளிக்கு 10 வட்டாரங்களும், பூநகரிக்கு 10 வட்டாரங்களும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

இந்த வட்டார. எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கான ஆலோசனை வழங்கும் இறுதித்திகதி நாளை வரை வழங்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ.ஜக்ஸில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சீனிவாசன், உதவி அரசாங்க அதிபர் ஜெயராணி, கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர்கள், கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் நா.வை. குகராஜா, பிரதேச சபை உறுப்பினர்கள், புள்ளிவிபரவியலாளர், நிலஅளவை அத்தியட்சகர், உதவித்திட்டமிடற் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

### பாக்.கடற்படை...

மட்டப் பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாகவே இந்த விஜயம் அமைகின்றது. இந்தத் தூதுக்குழுவினர் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜனத கொலம்பேஜ் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை சந்திக்கவுள்ளனர். இதேவேளை, இந்தத் தூதுக்குழுவினர் கிழக்கு மற்றும் தென் கடற்படை தலைமையகங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர். இந்தத் தூதுக்குழுவின் சந்திப்புக்கள் மற்றும் முக்கிய செயற்பாடுகளின்போது கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கேணல் ஷியகர் பட்டும் பங்குபற்றுவார்.

### இராணுவ...

கள் இருவரும் நெல் மூடைகளுக்கு அருகில் படுத்து உறங்கி விட்டனர். எதிர்பாராத விதமாக அந்த வீதியால் பயணித்த படையினரின் தண்ணீர் பவுஷர் அவர்களின் மீது ஏறிச்சென்று விட்டது. இதனாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டது.

(கே)

# தலையெடுக்கும் மதவாதம் தணிக்க விசாரணை வேண்டும்

## ரணில் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் புதிதாக தலையெடுத்துவரும் மதவாதத்தைத் தூண்டுவோருக்கு எதிராக அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அடிப்படை வாதம் தொடர்பிலான அனைத்து முறைப்பாடுகள் தொடர்பிலும் சுயாதீனமான விசாரணைகளை அரசு நடத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரியுள்ளார்.

இது தொடர்பில் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று விசேட உரை ஒன்றை நிகழ்த்தினார்.

பௌத்த அடிப்படை வாத குழுக்களினால் அண்மைக் காலமாக இலங்கையில் இனமுரண்பாட்டை ஏற்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸாரின் முறைபாடுகைளத் தெரிவிக்குமாறு அரசாங்கம் கோரி இருந்தது. எனினும், அவ்வாறான முறைபாடுகள் தொடர்பில் பொலிஸார் அவதானம் செலுத்துவதில்லை என்று ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் இது குறித்து சுயாதீனமான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

## இனி அதற்கு தடையில்லை

(கொழும்பு)

சிங்களமொழி மூலமான பாடசாலைகளில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவிகள் அந்த பாடசாலைக்கு ஹிஜாப் அணிந்து செல்லமுடியும் என்று உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோதே உயர் நீதிமன்றம் மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது.

ருவன்வெல்ல பிரதேசத்திலுள்ள சிங்கள பாடசாலையொன்றில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் அணிவதை குறித்த பாடசாலையின் அதிபர் தடை செய்துள்ளார்.

இந்நிலையில் அந்த பாடசாலையில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவியின் பெற்றோர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். குறித்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய போதே சிங்கள பாடசாலைகளில் கல்வி கற்கும் முஸ்லிம் மாணவிகள் தமது ஹிஜாப் ஆடையை அணிய முடியுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலை வழக்கு விசாரணைகள் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது. இதன் விசாரணைகளில் கலந்து கொண்ட மறைந்த பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருனிகா நீதிமன்றத்திலிருந்து வெளியேறுகின்றார்.

## உயிர்காக்கும் மனிதாபிமான உதவி



சிறுநீரகக் கோளாறு காரணமாக பாடசாலை மாணவன் ஒருவன் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார். கல்திட்டி லேன், கொககுவில் மேற்கு, கொக்குவில் என்ற முகவரியைச் சேர்ந்த கிருஷ்ணன் இராகுலன் என்ற மாணவனே இவ்வாறு பாதிக்கப்பட்டிருக கின்றார். இவரை இந்த நோயின் பிடியில் இருந்து மீட்டெடுக்க பொதுமக்களிடம் இருந்து சமூகசேவை அமைப்புக்களிடமிருந்தும் அவரது குடும்பத்தினர் உதவிகளை எதிர்பார்க்கின்றனர். வறுமை நிலையில் இருக்கும் இக்குடும்பத்தினரால் மேற்படி சிகிச்சைக்கான நிதிச்சுமையை தாங்கிக் கொள்ள முடியாமையினாலேயே இவ்வாறு உதவிகளை எதிர்பார்க்கின்றனர். மனித்நேயத்துடன் உதவியளிக்க விரும்புபவர்கள் இம் மாணவனின் தாயாரான கிருஷ்ணயோகலட்சுமியின் பெயரில் கொக்குவில் இலங்கை வங்கிக் கிளையில் உள்ள இல - 71856392 என்ற கணக்கில் தமது உதவித்தொகையை வைப்பில் இடலாம் என்று கோரப்பட்டிருக்கிறது. மேலும் பி-பிளஸ் குருதிப் பிரிவை உடைய இவருக்கு சிறுநீரகத்தை தானம் செய்ய விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம். தொலைபேசி இல, 0217900623.

## சண்டிலிப்பாயில் பெண் பணமோசடி; பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு

சண்டிலிப்பாயைச் சேர்ந்த பெண் ஒருவர் அப்பகுதி மக்களை ஏமாற்றி பல இலட்சம் ரூபாவை மோசடி செய்து தலைமறைவாகி உள்ளார்.

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த குறித்த பெண் பணத்தைப பெற்றுக்கொண்டு மீற்றர் வட்டிக்குத் தருவதாகக் கூறி அப்பிரதேச மக்களிடம் பல இலட்சம் ரூபா பணம் மற்றும் நகைகளைப பெற்றுக்கொண்டார். அதற்கு சில காலங்கள் வட்டிகொடுத்தும உள்ளார்.

அண்மையில் இவர் வீட்டை விட்டு வெளியேறி தலைமறைவாகி உள்ளதாகவும் அவரது தொலைபேசி செயலிழந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவரின் மோசடிக்கு இவரது மகளும் உடந்தையாக இருந்ததாகவும் தெரிவிக்கின்றனர். இதேவேளை இவர் படகுமூலம் நாட்டைவிட்டு வெளியேறுவதற்காகப் படகோட்டிகளிடம் பேரம்பேசி வருவதாக அறிய முடிகிறது. இது குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளனர். இதேவேளை பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோளின்படி இன்றையதினம் மானிப்பாய் ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் ஜீவா மேற்படி மக்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (54)

## வீதி விபத்தில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் சுரேஸ் ஸ்ருடியோவுக்குச் சமீபமாக நேற்று நண்பகல் நடைபெற்ற வீதி விபத்தொன்றில் ஆறுவயதுச் சிறுவன் ஒருவன் காரில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளான்.

அதே இடத்தைச் சேர்ந்த பாஸ்கரன் பிரவின் (வயது-6) என்பவனே இவ்வாறு படுகாயமடைந்துள்ளான். சம்பவ நேரம், குறித்த சிறுவன் வீட்டின் முன் வீதியோரமாக தனது தாயாரின் கையைப் பிடித்தவாறு நின்றிருந்த சமயம் திடீரென்று ஓடிச் சென்று வீதியைக் கடக்க முற்பட்டபோது வீதியால் வந்து கொண்டிருந்த கார் சிறுவன் மீது மோதியதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தலையில் படுகாயமடைந்த சிறுவன் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா)

## "காவியநாயகன்" அரங்க ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்திரிக்கும் மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான திருப்பாடுகளின் நாடகம் 'காவிய நாயகன்' என்னும் பெயரில் இம்முறை மூன்று இடங்களில் மேடையேற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 21, 22,23,24 ஆகிய திகதிகளில் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ள இவ் ஆற்றுகை, அதற்கு முன்பாக மார்ச் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் கொழும்பு மறை மாவட்டத்தின் அனுசரணையுடன் கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலய முன்றலிலும், 16 ஆம் திகதி இளவாலை திருமறைக் கலாமன்ற அரங்கிலும் மேடையேற்றப்படவுள்ளது.

அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக பல நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பங்கேற்கின்ற இவ்வாற்றுகைக்கான ஒத்திகைகள் கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற பிரார்த்தனையுடன் வழங்கும் வைபவத்தைத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய 'காவிய நாயகன்' ஆற்றுகை இதற்கு முன்பாக 2001, 2004, 2008 ஆகிய ஆண்டுகளில் மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## எரிபொருள் நிலையத்தில் திருட்டு; இரு இளைஞர்கள் மடக்கிப் பிடிப்பு

### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் திருட்டில் ஈடுபட்ட இரு இளைஞர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று இரவு 9.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் பெற்றோல் நிரப்பு நிலையத்தின் அலுவலகத்தை உடைத்து ஒயில்க்கான்களை எடுத்துள்ளதுடன் எரிபொருள் நிரப்பும் பம்புகளின் பூட்டுக்களையும் உடைத்துள்ளனர்.

இதனைக் கண்டபொது மகன் ஒருவர் அங்கு சென்றபோது அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பியோட முயற்சித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பெற்றோல் இல்லாததால் அவர்கள் இருவரும் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (08,135)

## மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி நாளை மதியம் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் சி.இராமச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.சிறிகரனும், சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி இணைப்பாளர் ஐ.சிறிரங்கேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (116)

அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்க பல்கலை.
அனுமதி பெற்ற மாணவர்களுக்கு
விசா வழுங்கல்





University of Wollongong Australia, Toronto University Canada, Missouri University of Science and Technology America ஆகியவற்றுக்கு சிகரம் ஊடாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விசா அனுமதி கடிதம் 16-02-2013 சனிக்கிழமை சிகரம் நிறுவனத்தில் பணிப்பாளரால் வழங்கிவைக்கப்பட்டது.

(C/2451)

இம்மாத இறுதியில் மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு விசா அனுமதி வழங்கப்படவுள்ளது.

IELTS, வங்கிப்பணம், தூதரக நேர்முகத்தேர்வு எதுவுமின்றி Australia, Canada, America, New Zealand, Malaysia, UK ஆகிய நாடுகளில் கல்வி கற்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
MEDIA & EDUCATION
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com
www.sikaram.lk

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 பெப்ரவரி 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.